Vidyodaya Journal of Humanities and Social Sciences

VJHSS (202), Vol. 10 (02)

# UVA Community Radio: A Historical Perspective

**B. Kanageshwary* and S. Poongulaly**

Department of Media Studies, University of Jaffna, Sri Lanka

**Article Info**

Article History:
Received 09 Feb 2024
Accepted 28 Oct 2025
Issue Published Online
01 July 2024

**Key Words:**
History
Content of the programme
Uva Community Radio
Community Radio
Characteristics

*Corresponding author
E-mail address:
balakanagesh09@gmail.com

https://orcid.org/0009-0008-6468-329X

Journal homepage:
http://journals.sjp.ac.lk/index.php/vjhss

http://doi.org/10.31357/fhss/vjhss.v10i02.12

VJHSS (2025), Vol. 10 (02), pp. 163-181

ISSN 1391-1937/ISSN 2651-0367 (Online)

CC BY

Faculty of Humanities and Social Sciences 2025

## ABSTRACT

*Community radios have emerged to bring out the unspoken issues of grassroots people through their voices and strengthen them in Sri Lanka. This research investigates about the history of Uva community radio and its steps of growthen with the challenges. The primary objective of this study is to determine whether Uva Community Radio functions as a complete community radio station by broadcasting the voices of oppressed people from the upcountry region. This study has been followed as quantitative and qualitative research with the ten operational definitons which were identified as the parameters for operating as the voice of the voiceless, which include working on a non-profit basis, expressing local language and identity, having various social programs, accommodating minority groups, improving the educational knowledge of the community, promoting good governance, communicating local culture, participating in regional development, and operating independently. The study concludes that Uva Community Radio was established to bring the voices of marginalized people in Uva Province to the forefront. However, its programming has been adapted to include more entertainment-focused content, leading to its departure from being a complete community radio station. Additionally, the study identified challenges faced by Uva Community radio, including a lack of funding, insufficient technical equipment resources, political interference, a lack of human resources for field trips, and a change in frequency. Further, the study concludes that Uva Community radio fully operated as a community radio station during its first ten years of operation, but after 2013, it was separated from being a complete community radio station. The programming on Saturdays has more community radio characteristics, while programming on Tuesdays has the least.*

***Keywords**: History, Content of the programme, Uva Community Radio, Community Radio Characteristics*

ஊவா சமூக வானொலி: ஓர் வரலாற்றுப் பார்வை

## 1. அறிமுகம்

மக்கள் மத்தியில் விரைவாக தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதாக வானொலி ஊடகம் வளர்ச்சி அடைந்துள்ளது. மக்களும் தங்களை அறிந்தோ அறியாமலோ ஊடகங்களோடு இணைந்து விட்டனர். தகவல்களை பரிமாறிக்கொள்ளவும், சிறந்த பொழுதுபோக்கினை வழங்கவும் அதிகம் வல்லமை பெற்ற ஊடகமாக வானொலி அமைகிறது. ஒலியினால் காட்சிப்படுத்தலை வழங்குவதே வானொலி மீதான மக்கள் சார்புக்கு அதிக காரணமாகும்.

### 1.1 ஜனரஞ்சக வானொலி

மக்களுடன் நெருக்கமான தொடர்புகளை ஏற்படுத்தக்கூடிய செவிப்புல ஊடகமாக வானொலி அமைகிறது. அவற்றுள் ஜனரஞ்சக வானொலி என்பது மக்களின் பொது நலனை அடைவதற்காகவும், சமூகத்தின் பொதுநலனைப் பாதுகாக்கவும், பல்வேறுப்பட்ட அரசியல், பொருளாதார, சமூக, கலாசார யதார்த்தங்களை வானொலி மூலம் வெளிக்கொணர்ந்து தேசிய ரீதியில் அனைத்து மக்களையும் நேயர்களாகக் கொண்டு செயற்படும் வானொலி ஜனரஞ்சக வானொலி எனப்படும். ஜனரஞ்சக வானொலிகள் எல்லா நாடுகளிலும் காணப்படுகின்றன. இங்கு பல்வேறுபட்ட மக்களை கவனத்திற் கொண்டு நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாகின்றன. விளையாட்டு நிகழ்ச்சிகள், கவியரங்குகள், இலக்கிய நிகழ்ச்சிகள், கல்வி நிகழ்ச்சிகள், அறிவியல் நிகழ்ச்சிகள் என்பவற்றினூடாக பெரும்பாலான மக்களை நேயர்களாகப் பெற்றுக் கொள்வதுடன் பொழுதுபோக்கு அம்சங்களையும் அடிப்படையாகக் கொண்டவையாகும். (Santha,A.1990).

### 1.2 இணையத்தள வானொலி

மக்களுடன் நெருக்கமான தொடர்பினைக் கொண்டிருக்கின்ற வானொலி தொழில்நுட்ப வளர்ச்சியையும் தன்னுள் கொண்டிருக்கிறது. தொழில்நுட்ப வளர்ச்சியின் பரிணாமமாக இணையத்தள வானொலிகளும் காணப்படுகின்றன. உலகம் முழுவதும் பரந்துள்ள இடைத்தொடர்பு வலையமைப்புக்கள் மூலமாக உருவாக்கம் பெற்ற இணையத்தினூடாக ஒலிபரப்பப்படும் வானொலி இணைய வானொலி ஆகும். உலகில் இணைய பயன்பாட்டின் வளர்ச்சிக்குப் பின்னர், பல்வேறு நாடுகளிலும் வெவ்வேறுப்பட்ட மொழிகளில் இணைய வானொலிகள் தோற்றம் பெற்றன. பல்வேறு வளர்முக நாடுகளில் இணைய வானொலிகளின் பயன்பாடு அதிகமாகக் காணப்படுகின்றன. அமெரிக்கா போன்ற அபிவிருத்தி அடைந்த நாடுகளில் இணைய வானொலிகள் பாரிய வளர்ச்சியடைந்துள்ளன.

### 1.3 சமூக வானொலி

சமூக வானொலி என்பது பிராந்திய எல்லை ஒன்றை இலக்காகக் கொண்டு நிகழ்ச்சிகளை தொடர்ந்து வழங்கும் வானொலி நிலையங்களே சமூக வானொலி நிலையங்களாகும். குறித்த சமூக மக்களின் வாழ்வியல், கலை, கலாசாரம், பொருளாதாரம், கல்வி என்ற பல்வேறு விடயங்களை சமூக வானொலிகள் வெளிப்படுத்துவதுடன் கிராமிய மக்கள் உலக அறிவியலுடன் தம்மை இணைத்துக் கொள்வதற்கும், உலக அறிவினை இலகுவில் பெற்றுக் கொள்வதற்கான நுழைவாயிலாகவும் சமூக வானொலிகள் அமைகின்றன.

சமூக வானொலிகள் இணையத்தளம் மற்றும் பண்பலை மூலமாகவும் செயற்படுவதுடன் நில அடிப்படையில் மக்களிடையே நிலவும் இடைவெளியினைக் குறைத்து அறிவியல் விழிப்புணர்வை ஏற்படுத்தவும் சமூக வானொலிகள் செயற்படுகின்றன. சமூக வானொலியில் மக்களின் பங்களிப்பு முக்கியமானதாகும். சமூக வானொலியின் நிகழ்ச்சிகளை தயாரிப்பவர்களும், வடிவமைப்பவர்களும், அதனை வெளியிடுபவர்களும், குறித்த சமூகத்தினரே ஆவர். பிராந்திய கலாசாரத்தின் இருப்புக்கும், பரிமாற்றத்திற்கும் சமூக வானொலி நிலையங்கள் சிறந்த சாதனங்களாகும்.

### 1.4 உலகில் சமூக வானொலி

சமூக வானொலி என்பதன் கேள்விக்குப் பலரும் பல பதில்களை கூறுகின்றனர். அதற்கு சமூக வானொலியின் செயற்பாடும் அதன் இயங்குத்தன்மையும் நாட்டுக்கு நாடு வித்தியாசமாக இருப்பதே காரணமாகும். ஐரோப்பாவில் சமூக வானொலி உள்ளூர் வானொலி என்ற தொனியில் இயங்குகிறது. இலத்தின் அமெரிக்க நாடுகளில் சிவில் சமூகம், அபிவிருத்தி போன்ற விடயங்கள் சமூக வானொலியின் முக்கிய தொனியாக அமையும். சமூக வானொலிக்கு கிராமிய வானொலி, ஒன்றிணைவு வானொலி, பங்கேற்றல் வானொலி, சுதந்திர வானொலி, மாற்றீட்டு வானொலி, ஜனரஞ்சக வானொலி, கல்வி வானொலி, மக்கள் வானொலி, மக்களுக்கான வானொலி என பல்வேறுப்பட்ட பெயர்கள் வழங்கப்படுகின்றன. சமூக வானொலிகள் பல்வேறு நாடுகளில் காணப்படுகின்றன. ஒவ்வொரு நாடும் தன் நாட்டின் சமூக அடையாளத்தையும், சமூக மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்தும் ஒரு வலுவாக்கல் சாதனமாகவே சமூக வானொலி நிலையங்களை உருவாக்கியுள்ளது.

உலகின் பல பகுதிகளில் சமூக வானொலி சிவில் சமூகம், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் குடிமக்கள் சமூக மேம்பாட்டு நோக்கங்களுக்காக

கூட்டாக இணைந்து பணியாற்றுவதற்கான தளமாகச் செயற்படுகிறது. பிரான்ஸ், ஆர்ஜென்டினா, தென்னாபிரிக்கா, அவுஸ்திரேலியா, அயர்லாந்து, போன்ற நாடுகளில் சட்டபூர்வமாக வரையறுக்கப்பட்ட சமூக வானொலி ஒரு தனித் துறையாக இயங்குகிறது. லண்டன், அயர்லாந்து, அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் சமூக வானொலிக்கு வித்தியாசமான அர்த்தங்கள் காணப்படுவதுடன் அங்கு பேச்சு சுதந்திரம் மற்றும் நடைமுறை அர்த்தங்கள் வேறுபடுகின்றன.

## 1.5 இலங்கையில் சமூக வானொலி

இலங்கையின் வானொலி வரலாறு 1925ம் ஆண்டு இலங்கை வானொலியுடன் ஆரம்பமாகியது. பின்னர் பல பண்பலை வானொலிகள் தோன்றி மறைந்தாலும் சில வானொலி பண்பலைகள் நின்று தாக்கு பிடித்தன. அவை பெரும்பாலும் ஜனரஞ்சக வானொலிகளாகவே அமைந்திருந்தன. ஜனரஞ்சக வானொலி என்பது மக்களின் பொது நலனை அடைவதற்காகவும், சமூகத்தின் பொது நலனைப் பாதுகாக்கவும், பல்வேறுப்பட்ட அரசியல், பொருளாதார, சமூக, கலாசார யதார்த்தங்களை வானொலி மூலம் வெளிக்கொணர்ந்து தேசிய ரீதியில் அனைத்து மக்களையும் நேயர்களாகக் கொண்டு செயற்படும் வானொலியாகக் காணப்படுகின்றது. இதற்குப் பிற்பட்ட காலங்களில் சமூக வானொலிகள் தோற்றம் பெற்றன. இலங்கையில் முதன் முதலில் சமூக வானொலிப் பற்றிய முன்மொழிவை யுனெஸ்கோ நிறுவனத்தில் கடமையாற்றிய டென்மார்க் நாட்டவரான நூட் எபசன் 1981 ம் ஆண்டு முன்வைத்தார்.

இணையத்தள சமூக வானொலிகள், பண்பலை சமூக வானொலிகள் என இலங்கையின் சமூக வானொலிகளை இரு வகைப்படுத்த முடியும். பண்பலை சமூக வானொலி ஆரம்பிக்கப்பட்டு 25 வருடங்களின் பின்னர், இணையத்தள சமூக வானொலிகள் தோற்றம் பெற்றன. இன்று பல்வேறுப்பட்ட இணையத்தள சமூக வானொலி நிலையங்கள் உருவாகியுள்ளன. எனினும் நின்று நிலைக்ககூடிய தன்மையை சில இணையத்தள சமூக வானொலிகளே பெற்றுள்ளன. (விஜேந்திரன்,இ.2009).

இலங்கையில் வடக்கு, கிழக்கு, மலையகம், மேல் மகாணங்கள் சார்ந்து இயங்கக்கூடிய இணையத்தள வானொலிகள் காணப்படுகின்றன. குறிப்பிட்டுக் கூறக்கூடிய வகையில் தம்பதெனிய சமூக வானொலி, பிரபவி சமூக வானொலி, ரன்சர சமூக வனொலி, நண்பர்கள் சமூக வானொலி, ஞான சமூக வானொலி போன்றவை இணையத்தளம் சார்ந்து இயங்கும் சமூக வானொலிகளாகும்.

புதிய ஒரு நாகரீகத்தை அண்மித்து வாழத்தொடங்கும் மக்களின் வாழ்க்கை பிரச்சினைகளை எடுத்துக் காட்டவும், புதிய அபிவிருத்தித் திட்டத்திற்கு அமைவாக மக்களின் அறிவியல், நடத்தை மற்றும் பலத்தை கட்டியெழுப்பவும் புதிய தொடர்பாடல் முறையாக பண்பலைச் சார்ந்த சமூக வானொலி நிலையங்கள் அரசினால் உருவாக்கப்பட்டன. மகாவலி சமூக வானொலி, கிராந்துருகோட்டை சமூக வானொலி, கொத்மலை சமூக வானொலி, மகாஇலுப்பள்ளம சமூக வானொலி, ஊவா சமூக வானொலி போன்ற பண்பலை சார்ந்த சமூக வானொலிகள் உருவாக்கப்பட்ட போதிலும் இன்று வரை நிலைத்திருக்கும் சமூக வானொலியாக ஊவா சமூக வானொலி இயங்கி வருகின்றது.

## 1.6. ஊவா சமூக வானொலி

இலங்கையைப் பொறுத்த வரையில் அரசியல், கல்வி, வாழ்வாதாரம் என்பவற்றில் பின்தங்கிய மாகாணமாக ஊவா மாகாணம் அடையாளம் காணப்படுகிறது. ஒடுக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகள் சார்ந்தும், மலையக மக்கள் சார்ந்தும் தோற்றம் பெற்ற ஊடகமாக ஊவா சமூக வானொலி அமைகிறது.

மக்களின் அடிப்படைத் தேவைகளை மக்கள் மத்தியிலிருந்து பேசும் நோக்கத்திற்காக ஊவா சமூக வானொலி தோற்றம் பெற்று இருபது ஆண்டுகளாக செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. ‘‘பொருளாதாரம், கல்வி, அடிப்படை வசதிகள் என அனைத்து துறைகளிலும் சரிவைக் கண்ட மாகாணமாக ஊவா மாகாணம் அமைந்திருந்தது. பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் மிகவும் பாதிக்கப்பட்ட மாகாணமாக ஊவா மாகாணம் இருந்தமையினால் 1994 காலப்பகுதிகளில் ஊவா மாகாணத்தை மையப்படுத்தி அடிப்படை வசதிகள் சார்ந்த செயற்திட்டங்கள் ஐக்கிய நாடுகள் சபையினால் முன்னெடுக்கப்பட்டது. ஐந்து வருடங்களின் பின்னர் மக்கள் மத்தியில் செயற்திட்டம் தொடர்பான மதீப்பீட்டினை மேற்கொண்ட போது, செயற்திட்டம் முழுமையாக மக்களை சென்றடையவில்லை. மக்களின் தேவைகளை அறிந்து செயற்திட்டம் முன்னெடுக்கப்படவில்லை என்பதையும் செயற்திட்டத்தை முன்னெடுத்த குழு அறிந்துகொண்டது. மக்களின் கருத்துக்களையும், பிரச்சினைகளையும் பேசுவதற்கு சமூக மட்டத்திலிருந்து ஊடகங்கள் செயற்பட வேண்டும். என்பதைக் கருத்திற் கொண்டு யுனெஸ்கோ நிறுவனம் ஊவா சமூக வானொலியை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டது. இம் முயற்சியில் ஊவா மாகாண சபை மற்றும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், ஆகிய நிறுவனங்களும் இணைந்துக் கொண்டது.’’

### 1.7. ஆய்வுப் பிரச்சினை

தொழில்நுட்ப வளர்ச்சியால் ஊடகங்கள் வளர்ச்சியடைந்த போதிலும் இன்றும் இலத்திரனியல் ஊடகமான வானொலியின் செல்வாக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகிறது. வானொலி பெரும்பாலும் மேற்தர மக்களின் பிரச்சினைகளை அதிகம் பேசுவதால் சமூகம் சார்ந்த வானொலியின் தேவை அவசியமாகக் காணப்படுகிறது. பின்தள்ளப்பட்ட பிரதேச மக்களின் பிரச்சினைகளைத் தொடர்ந்து பேசவும், மக்களின் தேவைகளை உணர்ந்து செயற்படவும் குறித்த சமூகம் சார் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் பிராந்தியம் சார்ந்த வானொலிகள் அவசியமாகும். அந்தவகையில், இலங்கையைப் பொறுத்த வரையில் அரசியல், கல்வி, வாழ்வாதாரம் என்பவற்றில் பின்தங்கிய மாகாணமாக ஊவா மாகாணம் காணப்படுகிறது. ஒடுக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகள் சார்ந்தும், மலையக மக்கள் சார்ந்தும் தோற்றம் பெற்ற ஊடகமாக ஊவா சமூக வானொலி அமைகிறது. மக்களின் அடிப்படைத் தேவைகளை மக்கள் மத்தியிலிருந்து பேசும் நோக்கத்திற்காக ஊவா சமூக வானொலி தோற்றம் பெற்று இருபது ஆண்டுகளாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. அவ்வகையில், தோற்றம் பெற்ற காரணத்தின் பொருட்டு ஊவா சமூக வானொலி குரலற்ற மக்களின் குரலாக முழுமையாக இயங்கிக் கொண்டிருக்கிறதா என்பதை இனங்காண்பதும், ஊவா சமூக வானொலியின் வரலாற்றை ஆய்வு செய்யவேண்டிய தேவையின் பொருட்டும் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 1.8 ஆய்வு வினாக்கள்

ஆய்வுக்கான பிரச்சினையை சரியாக வரையறுத்துக் கொள்ளவும் ஆய்வின் இலக்கினை நோக்கி நகரவும் ஆய்வு வினாக்கள் அவசியமாகிறது. அவ்வகையில், இந்த ஆய்வுக்கான பிரதான வினாவாக

- மக்களின் பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கும் முழுமையான சமூக வானொலியாக ஊவா சமூக வானொலி செயற்படுகிறதா?
- என்ற வினா ஆய்வாளரால் முன்வைக்கப்பட்டுள்ளது.
- அதேவேளையில் இந்த ஆய்வுக்கான துணைவினாக்களாக,
- ஊவா சமூக வானொலியின் வரலாற்றுப் பின்னணி என்ன
- ஊவா சமூக வானொலியின் வளர்ச்சிக் காலக்கட்டங்கள் எவை
- ஊவா சமூக வானொலி ஓர் சமூக வானொலிக்கான பண்புகளை கொண்டுள்ளதா
- ஊவா சமூக வானொலியின் நிகழ்ச்சிகளில் எவ்வாறான சமூக வானொலிக்கான பண்புகள் காணப்படுகின்றன
- சமூக வானொலியின் பண்புகளாக அடையாளப்படுத்தப்பட்ட பண்புகள் ஊவா சமூக வானொலியில் எவ்வாறு பிரதிபலிக்கின்றன
- சமூக வானொலி என்ற ரீதியில் ஊவா சமூக வானொலியின் சவால்கள் எவை

ஆகிய வினாக்கள் ஆய்வுக்கான துணை வினாக்களாக முன்வைக்கப்பட்டுள்ளன.

### 1.9 ஆய்வு நோக்கங்கள்

ஆய்வு வழியாக சமூக பயனுடைமைக்கு உதவுதல், ஆய்வு தொடர்பாக ஆய்வாளனின் அறிவை ஆழமாக்குதல் போன்றவை ஆய்வின் நோக்கங்களாக அமைகின்றன. அவ்வகையில் மக்களுக்காக குரல் கொடுக்கும் முழுமையான சமூக வானொலியாக ஊவா சமூக வானொலி செயற்படுகிறதா என்பதைக் கண்டறிவதே ஆய்வின் பிரதான நோக்கமாகும். ஆய்வுக்கான துணை நோக்கங்களாக ஊவா சமூக வானொலியின் வரலாற்றுப் பின்னணியை ஆராய்தல், ஊவா சமூக வானொலியின் வளர்ச்சிக் காலக்கட்டங்களை கண்டறிதல், ஊவா சமூக வானொலி நிகழ்ச்சிகள் கொண்டிருக்கின்ற சமூக வானொலிக்கான பண்புகளை அடையாளப்படுத்தல், சமூக வானொலிக்கான பண்புகள் ஊவா சமூக வானொலியில் எவ்வாறு பிரதிபலிக்கின்றன, ஊவா சமூக வானொலியின் சவால்களை இனங்காணுதல் என்பன ஆய்வுக்கான துணைநோக்கங்களாக முன்வைக்கப்பட்டுள்ளன.

### 2.0 இலக்கிய மீளாய்வுகளும் ஆய்வு முறைமைகளும்

ஆய்வோடு தொடர்புடைய பிரச்சினையை வரைவிலக்கணம் செய்யவும், பிரச்சினையுடன் தொடர்புடைய ஆக்கங்களை விமர்சன ரீதியில் ஆராயவும், ஆய்வுப் பிரச்சினை தொடர்பாக தற்போதைய அறிவுகளையும், இடைவெளிகளையும் கண்டறியவும் ஆய்வுடன் தொடர்புடைய பகுதிகளையும், விவாதத்திற்குரிய பகுதிகளை கண்டறியவும், கோட்பாடுகள் மூலம் புதிய அறிவைத் தேடவும் முன்னைய ஆய்வுகள் மீதான பார்வை அவசியமாகிறது.

அவ்வகையில், பிரிட்டனில் சமூக வானொலி தோற்றம் மற்றும் வளர்ச்சி (The Origins and Development of Community Radio in Britain) எனும் ஆய்வானது சால்வடோர் சை∴போ (Scifo.S.) என்பவரால் தனது கலாநிதிபட்ட ஆய்வுக்காக வெஸ்ட்மின்ஸ்டர்

பல்கலைக்கழகத்தில் 2011ம் ஆண்டு டிசம்பர் மாதம் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வாகும்.

1997ம் ஆண்டு தொடக்கம் 2007 வரையான காலப்பகுதியில் பிரிட்டனில் தோற்றம் பெற்ற சமூக வானொலி நிலையங்களையும் அதன் செயற்பாட்டுத் தன்மையையும் அடிப்படையாகக் கொண்டதாக இவ் ஆய்வு அமைந்துள்ளது. பிரிட்டனில் உள்ள சமூக வானொலிகளையும் அவற்றின் வளர்ச்சிப் போக்கையும் ஆய்வு செய்து, சமூக வானொலிக் கொள்கைகளை சூழலில் நடைமுறைப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டதாக இவ் ஆய்வு அமைந்துள்ளது.

ஐஸ்லாந்து வைஹேக் தீவிலுள்ள சமூக வானொலி: ஒரு வகைமை ஆய்வு (Community Radio on Waiheke Island: A Case study) எனும் ஆய்வானது ப்ரெண்ட் சிம்ப்சன் (Brent Simpson) என்பவரால் தனது முதுகலைமானி பட்டபடிப்பிற்காக 2010 ஆண்டு ஐஸ்லாந்து பல்கலைக்கழகத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வாகும்.

இந்த ஆய்வு ஐஸ்லாந்தின் வைஹேக் தீவிலுள்ள சமூக வானொலி நிலையத்தின் வளர்ச்சி போக்கு, சமூக வானொலிக்கும் சமூகத்திற்கும் இடையிலான உறவு முறைகள், சமூகத்தின் செயற்பாடுகள் சமூக வானொலிகளை எவ்வாறு பாதித்தது போன்ற விடயங்கள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன. நேர்காணல்கள் மற்றும் அவதானிப்பு போன்ற முறைகளில் வைஹேக் தீவிலுள்ள சமூக வானொலியின் வளர்ச்சிப் போக்கினை இந்த ஆய்வு முன்மொழிவதாக அமைந்துள்ளது. ஆய்வானது சமூகத்தின் சமூகவியல் மற்றும் மானுடவியல் அரசியல் விளக்கங்களின் மறு ஆய்வு, சமூகத்திற்கும் ஊடகத்திற்கும் இடையிலான உறவை கட்டமைப்பதற்கான வழிமுறையாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வாகும். இந்த ஆய்வின் முடிவில் சமூகத்தில் மாற்றங்களை ஏற்படுத்த சமூக வானொலி முக்கிய பங்கு வகிப்பதாக ஆய்வாளரால் கண்டறியப்பட்டுள்ளது.

கொத்மலை சமூக வானொலி Iterorg திட்டம்: உண்மையான மற்றும் சிறந்த சமூக வானொலிக்கான பிரச்சாரம் (Kothmale Community Radio Iterorg Project : True Community Radio or Feel Good Propaganda) என்ற ஆய்வானது லிஸ்.ஹார்வி கார்ட்டர் (Liz Harvey-Carter) எனும் ஆய்வாளரினால் தனது முதுகலைமானி பட்டபடிப்பிற்காக அதாபாஸ்கா பல்கலைக்கழத்தில் 2009 ஆம் ஆண்டு இந்த ஆய்வு சமர்ப்பிக்கப்பட்டது.

கொத்மலை சமூக வானொலி நாட்டின் அபிவிருத்தியில் ஏனைய சமூக வானொலிகளுக்கு முன்னுதாரனமாக ஒரு செயற்திட்டமாக செயற்படுகின்றது என்பதை கண்டறிய ஆய்வாளர் முனைந்துள்ளார். இலங்கையின் சமூக வானொலி நிலையங்களின் தோற்றம், வளர்ச்சி செயற்பாடுகள் என்பவற்றை காலகட்டங்களின் அடிப்படையில் ஆய்வாளர் ஆய்வு செய்துள்ளார். கொத்மலை சமூக வானொலி தகவல் தொழில்நுட்பத்தினை நோக்கி நகர்வதில் உள்ள சவால்களை விமர்சன ரீதியாக திறனாய்வுக்கு உட்படுத்தியுள்ளதாக ஆய்வு அமைந்துள்ளது. ஆய்வாளர் கொத்மலை பிரதேச மக்களின் சமூக பொருளாதார நிலைப்பாடு, அவற்றின் இயங்குத்தன்மை போன்ற அம்சங்களை ஆய்வின் முடிவுகளாக கண்டறிந்துள்ளார்.

மலையகத்தில் மாற்று ஊடகமாக இணைய வானொலிகள் (The Web Radio As Alternative Medium in Upcountry) சரந்தாமன் மங்களதர்சினி எனும் ஆய்வாளரால் இளங்கலைமானி பட்டப்படிப்பிற்காக 2022 ம் ஆண்டு யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வாகும்.

இந்த ஆய்வில் நேர்காணல் மற்றும் அவதானிப்பு முறைகள் மூலம் தரவுகள் திரட்டப்பட்டதுடன் மலையகத்தை மையமாகக் கொண்டு இயங்கும் இணையத்தள வானொலிகளின் செயற்பாடுகள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. மலையகம் எவ்.எம், எம்.பி.சி வானொலி, திண்ணை ஓரம், இசை எவ்.எம் போன்ற வானொலிகள் அவதானிக்கப்பட்டன. அவற்றுள் மாற்று ஊடகப் பண்புகள் காணப்படுகின்றனவா மக்களின் குரல்களுக்கான இடத்தை மலையக இணைய வானொலிகள் வழங்குகின்றனவா என்பது தொடர்பாக இந்த ஆய்வு முன்மொழியப்பட்டு, இந்த ஆய்வின் முடிவில் மலையகத்தில் மலையகம் எவ்.எம் இணைய வானொலி ஏனைய மாதிரிகளை விடவும் அதிகளவிலான மாற்று ஊடகப் பண்புகளைக் கொண்டுள்ளதாகவும் மலையகம் எவ்.எம் இணைய வானொலியின் வணக்கம் மலையகம், சொல்ல வேண்டிய கதை மற்றும் live with thana ஆகிய நிகழ்ச்சிகளிலும் எம்.பி.சி வானொலியின் தேயிலை தேசத்தின் குரல் மற்றும் கதிரோன் நிகழ்ச்சிகளில் அதிகளவிலான மாற்று ஊடகப் பண்புகள் காணப்படுவதாக ஆய்வாளரால் ஆய்வின் முடிவாகக் கண்டறியப்பட்டன.

ஆய்வாளரின் தேடலுக்கு அமைவாக இதுவரை காலமும் ஊவா சமூக வானொலி ஓர் வரலாற்றுப் பார்வை பற்றிய ஆய்வு, எந்த ஆய்வாளனாலும் மேற்கொள்ளப்படவில்லை. எனவே இந்த ஆய்வானது சமூக வானொலி தொடர்பான புதிய போக்கினை கண்டறியக்கூடிய வகையில் முதன் முதலாக முன்னெடுக்கப்படும் ஆய்வாகவே அமைகிறது. முன்னைய ஆய்வுகளிலிருந்து

உள்ளடக்கத்திலோ அல்லது ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்ட பிரதேசத்தின் அடிப்படையிலோ அல்லது தெரிவு செய்யப்பட்ட மாதிரிகளின் அடிப்படையிலோ ஆய்வாளனின் ஆய்விலிருந்து வேறுபட்டு நிற்கின்றன. ஆய்வாளர் தெரிவு செய்திருக்ககூடிய ஆய்வானது **ஊவா சமூக வானொலி ஓர் வரலாற்றுப் பார்வை** எனும் தலைப்பின் அடிப்படையில் முன்னெடுத்து செல்லப்படுகின்றது.

## 2.1 ஆய்வு முறையியல்

ஆய்வு முறையியலானது ஆய்வொன்றின் நகர்வுத் தன்மையைத் தீர்மானிப்பதாகும். ஆய்வுகள் விஞ்ஞான ரீதியாக முடிவுகளைப் பெற பெருமளவில் எண்சார் தரவுகள் பயன்படுத்தப்படுகின்றன. ஆய்வுடன் தொடர்புடைய பெறுநர்களிடமிருந்து தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக அவதானம், நேர்காணல் போன்ற கருவிகள் மூலம் தரவுகள் சேகரிக்கப்பட்டன. இம் முறைமை பெறுதிசார் ஆய்வு முறையாகும். அவ்வகையில், ஊவா சமூக வானொலியின் வரலாற்றுடன் தொடர்புடைய பரப்பில் ஆய்வுக்குரிய பகுதிகளை மாத்திரம் உள்ளடக்கிய வகையில், உள்ளடக்கப் பகுப்பாய்வினை அடிப்படையாகக் கொண்டு ஆய்வாளரினால் **'ஊவா சமூக வானொலி ஓர் வரலாற்றுப் பார்வை'** என்ற தலைப்பில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இலங்கையில் இயங்கிக் கொண்டிருக்கின்ற சமூக வானொலிகளிலிருந்து நிகழ்தகவான முறையில் ஊவா சமூக வானொலி தெரிவு செய்யப்பட்டு, அதிலிருந்து தமிழ் மொழி மூலமான நிகழ்ச்சிகள் மட்டும் ஆய்விற்கான தரவு மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்டன. ஊவா சமூக வானொலியின் நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு பொதுவான சமூக வானொலிக்குரிய பண்புகள் வாய்ப்புப் பார்க்கப்பட்டன. தற்போது இயங்கிக் கொண்டிருக்கின்ற ஊவா சமூக வானொலியின் நிகழ்ச்சிகளில் சமூக வானொலிக்கான பண்புகள் உள்ளதா, அந்த நிகழ்ச்சிகளில் மக்களுக்கான பங்கேற்பும் பிரதிநிதித்துவமும் எவ்வாறு உள்ளது, விளிம்பு நிலை மக்களின் பிரச்சினைகளை எவ்வாறு நிகழ்ச்சிகள் வெளிக்கொண்டு வருகின்றன. போன்ற விடயங்கள் தொடர்பாக தரவுகள் சேகரிக்கப்பட்டு ஊவா சமூக வானொலியின் வரலாற்றினை ஆய்வு செய்வதன் மூலம் முழுமையான சமூக வானொலியாக ஊவா சமூக வானொலி செயற்படுகிறதா என்பதை இந்த ஆய்வு ஆராய்ந்துள்ளது.

## 2.2 மாதிரிகள் வடிவமைப்பு

ஆய்வில் முக்கியத்துவம் வாய்ந்தவையாக மாதிரிகள் அமைகின்றன. அந்த வகையில் தரவுகளைச் சேகரிக்கவும் அவற்றைக் கொண்டு ஆய்வினை மேற்கொள்ளவும் மாதிரிகள் அவசியமாக அமைகின்றன. ஆய்வுப் பரப்பிலுள்ள அனைத்து விடயங்களையும் ஆய்வு செய்வது என்பது சாத்தியமானதல்ல. எல்லாவற்றையும் ஆய்வுக்குட்படுத்துவது என்பது காலத்தையும் செலவையும் அதிகப்படுத்தும். எனவே, ஆய்வினை பிரதிநிதித்துவம் செய்யும் சரியான விடயங்களை ஆய்வுக்குட்படுத்துவதன் மூலம் ஆய்வின் நோக்கத்தை அடைந்து கொள்ள முடியும். இங்கு ஆய்வாளரால் இலங்கையில் இயங்கிக் கொண்டிருக்கின்ற சமூக வானொலிகளிலிருந்து நிகழ்தகவான முறையில் ஊவா சமூக வானொலி தெரிவு செய்யப்பட்டு, அவற்றிலிருந்து தமிழ் மொழி மூலமான நிகழ்ச்சிகள் மட்டும் ஆய்விற்கான தரவு மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்டன.

## 2.3 தகவல் சேகரிப்பு முறைகள்

ஆய்வானது திரட்டப்படும் தரவுகளிலும் தகவல்களிலும் தங்கியுள்ளது. திரட்டப்படும் தரவுகள் நம்பகமானதாகவும், சரியானதாகவும் ஆய்வுக்குட்படுத்தக் கூடியதாகவும் அமைய வேண்டும். ஆய்வில் பிரச்சினையை இனங்காண்பது முதல் படிநிலையாகும். ஆய்வு திட்டத்தை வடிவமைத்தல், ஆய்வுக்கருவிகள் அல்லது மாதிரிகளைத் தெரிவு செய்தல் எனும் அடிப்படையில் தரவு சேகரித்தல் செயன்முறை அமைகிறது.

ஆய்வுக்காக தெரிவு செய்யப்பட்ட ஊவா சமூக வானொலியின் தமிழ் மொழி மூலமான நிகழ்ச்சிகள் ஒரு வார காலம் செவிமடுக்கப்பட்டு ஆய்வுக்காக தரவுகள் திரட்டிக் கொள்ளப்பட்டன. ஊவா சமூக வானொலியின் செயலி மூலம் 18.09.2023 தொடக்கம் 30.09.2023 வரை இரண்டு வாரங்கள் மாலை 07 மணி தொடக்கம் இரவு 12 மணி வரைக்கும் செவிமடுக்கப்பட்டு / அவதானிக்கப்பட்டு திரட்டப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

தற்போது இயங்கிக் கொண்டிருக்கும் ஊவா சமூக வானொலியின் செயற்பாடுகளை முன்னெடுத்து செல்லும் நிகழ்ச்சித் தயாரிப்பாளர்களிடம் நேரடியாகச் சென்று நேர்காணல் மூலம் தரவுகள் திரட்டப்பட்டன. இந்த நேர்காணல் கட்டமைக்கப்பட்ட தனிப்பட்ட நேர்காணலாக அமைந்திருந்தது. பொதுமைப்படுத்தப்பட்ட வினாக்களைக் கொண்டு தனிப்பட்ட நேர்காணல் முறையில் ஆய்வுக்கான தரவுகள் சேகரிக்கப்பட்டன. அந்த வகையில் ஊவா சமூக வானொலி தோற்றம் பெற்ற காலத்தில் இருந்து தற்போது வரை பணியாற்றும் சுப்ரமணியம் அசோகன், பாத்திமா ரிஸ்வானா ஆகியோரிடமிருந்து 04.09.2023 திகதியன்று நேர்காணல் மூலம் தரவுகள் திரட்டப்பட்டன. பத்து வருடங்களுக்கு மேலாக ஊவா சமூக வானொலியில் பணியாற்றும் கணேசன்

மகாதேவன், முஹமட் ரமீஸ், ருக்ஷன் போன்றோர்களிடமிருந்து நேரடி நேர்காணல் மூலம் தரவுகள் திரட்டப்பட்டன. மேலும், ஊவா சமூக வானொலியை ஆரம்ப காலத்திலிருந்து செவிமடுக்கும் நேயர்களான சிவகுரு விமலநாதன், கந்தையா தர்மர் போன்றோரிடமிருந்து நேர்காணல் மூலம் தரவுகள் திரட்டப்பட்டன.


## 3.0 தரவுகளும் கலந்துரையாடலும்

தரவுப் பகுப்பாய்வு தரவுகளை அடிப்படையாகக் கொண்டவையாகும். ஊவா சமூக வானொலி தொடர்பான இவ் ஆய்வுக்காக அவதானம் மற்றும் நேர்காணல்கள் மூலம் முதல்நிலைத் தரவுகள் சேகரிக்கப்பட்டு பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டது. மேலதிகமாக இரண்டாம் நிலைத் தரவுகளான ஆய்வறிக்கைகள் நூல்கள் மூலம் சேகரிக்கப்பட்ட விடயங்களையும் அடிப்படையாகக் கொண்டு எண்சார் மற்றும் பெறுதிசார் அடிப்படையில் ஆய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது.


அந்த வகையில் பகுப்பாய்வுக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட சமூக வானொலியின் பண்புகளாக பின்வருபவை அமைந்துள்ளன.

1. குரலற்ற மக்களின் குரலாக அமைதல்.
2. இலாப நோக்கமற்று செயற்படுதல்.
3. உள்ளூர் மொழி, மற்றும் அடையாளத்தை வெளிப்படுத்தல்.
4. பல்வேறு நிகழ்ச்சிகளைக் கொண்டிருத்தல்.
5. சிறுபான்மைக் குழுக்களுக்கு இடமளித்தல்.
6. சமூகத்தின் கல்வி, அறிவை மேம்படுத்தல்.
7. நல்லாட்சியை ஊக்குவித்தல்.
8. உள்ளூர் கலாச்சாரத்தை வெளிப்படுத்தல்.
9. உள்ளூர் அபிவிருத்தியில் பங்கு வகித்தல்.
10. சுயாதீனமாக இயங்குதல்.


ஆகிய பண்புகள் சமூக வானொலிக்கான பொதுப் பண்புகளாக ஆய்வாளரினால் முன்வைக்கப்பட்டு, இப்பண்புகள் ஒவ்வொன்றும் எவ்வாறு ஊவா சமூக வானொலியோடு பொருந்தும் தன்மையைக் கொண்டிருக்கிறது என்பதை ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளது. இதற்கமைய ஊவா சமூக வானொலியில் ஒலிபரப்பாகும் தமிழ் மொழி மூலமான நிகழ்ச்சிகள் கொண்டிருக்கின்ற சமூக வானொலிக்கான பண்புகளை ஆய்வாளனின் அவதானிப்பின்படி, அடிப்படையாகக் கொண்டு திங்கட்கிழமைகளில் ஊவா சமூக வானொலியில் ஒலிபரப்பாகும் நிகழ்ச்சிகள் கொண்டிருக்கின்ற சமூக வானொலிக்கான பண்புகளை வரைபு 01 காட்டியுள்ளது. இதற்கமைய இன்னிசைத் திருமகள் 40%, மாறி வரும் உலகம் 99%, சினிமா உலகு 30%, இதயங்களே பேசுங்கள் 99%, நட்சத்திர தாலாட்டு 50%, என்ற அடிப்படையில் சமூக வானொலிக்கான பண்புகளைக் கொண்டு நிகழ்ச்சிகள் அமைந்துள்ளதை வரைபு காட்டுகிறது.




**வரைபு 01.** திங்கட்கிழமைகளில் ஒலிபரப்பாகும் நிகழ்ச்சிகளின் சமூக வானொலிப் பண்புகள் (விகிதாசாரத்தின் அடிப்படையில்)




**வரைபு 02.** செவ்வாய்க்கிழமைகளில் ஒலிபரப்பாகும் நிகழ்ச்சிகளின் சமூக வானொலிப் பண்புகள்





**வரைபு 03.** புதன்கிழமைகளில் ஒலிபரப்பாகும் நிகழ்ச்சிகளின் சமூக வானொலிப் பண்புகள் (விகிதாசாரத்தின் அடிப்படையில்)

வரைபு 02- செவ்வாய்க்கிழமைகளில் ஊவா சமூக வானொலியில் ஒலிபரப்பாகும் நிகழ்ச்சிகள் கொண்டிருக்கின்ற சமூக வானொலி பண்புகளின் விகிதாசாரத்தின் அடிப்படையில் வரைபு 02 காட்டியுள்ளது. இதற்கமைய மாலை மகுடம் 50மூ, என்னைக் கவர்ந்த கானங்கள் 70மூ, மனசுக்கு பிடித்த பாடல் 40மூ, இசையருவி 20மூ, இராக்கவி 80மூ என்ற அடிப்படையில் சமூக வானொலிப் பண்புகளை நிகழ்ச்சிகள் கொண்டிருக்கின்றன.


வரைபு 03 – ஊவா சமூக வானொலியில் புதன் கிழமைகளில் ஒலிபரப்பாகும் நிகழ்ச்சிகள் கொண்டுள்ள சமூக வானொலிப் பண்புகளை வரைபு 03 காட்டுகிறது. மாலை மகுடம் 70%

என்னைக் கவர்ந்த கானங்கள் 40%, சிகரம் தொடு 60%, இரவோடு உறவாடு 60%, இருமுகங்கள் 80%, என்ற அடிப்படையில் சமூக வானொலிப் பண்புகளை வரைபு காட்டுகிறது.


வரைபு 04 – வியாழக்கிழமைகளில் ஒலிபரப்பாகும் நிகழ்ச்சிகள் கொண்டுள்ள சமூக வானொலிப் பண்புகளை சதவீதத்தின் அடிப்படையில் வரைபு சுட்டிக்காட்டுகிறது. இதற்கமைய மாலை மகுடம் 70%, தீன் மணம் 50%, சங்கமம் 60%, நெஞ்சம் மறப்பதில்லை 60% என்ற அடிப்படையில் நிகழ்ச்சிகள் சமூக வானொலிப் பண்புகளைக் கொண்டிருக்கிறது.




**வரைபு 04.** வியாழக்கிழமைகளில் ஒலிபரப்பாகும் நிகழ்ச்சிகளின் சமூக வானொலிப் பண்புகள் (விகிதாசாரத்தின் அடிப்படையில்)




**வரைபு 05.** வெள்ளிக்கிழமைகளில் ஒலிபரப்பாகும் நிகழ்ச்சிகளின் சமூக வானொலிப் பண்புகள் (சதவீதத்தின் அடிப்படையில்)




**வரைபு 06.** சனிக்கிழமைகளில் ஒலிபரப்பாகும் நிகழ்ச்சிகளின் சமூக வானொலிப் பண்புகள் (விகிதாசாரத்தின் அடிப்படையில்)

வரைபு 05 – வெள்ளிக்கிழமை ஒலிபரப்பாகும் நிகழ்ச்சிகள் கொண்டுள்ள சமூக வானொலிப் பண்புகளை வரைபு காட்டுகிறது. இதற்கமைய மாலை மகுடம் 70%, குரலுக்கோர் அங்கீகாரம் 70%, இதயம் கேட்டவை 60%, நட்சத்திர தாலாட்டு 10% என்ற அடிப்படையில் சமூக வானொலிக்கான பண்புகளைக் கொண்டுள்ளது. பக்தி பாடல்கள் 20%, நலமான வாழ்வு 80%, மக்கள் நாதம் 50%, இன்று முதல் இணையத்தளம் 40%, விஷேட நேர்காணல் 80%, சித்திர சிட்டுக்கள் 80%, மறுமலர்ச்சி 90%, புன்னகை தேசம் 90%, நங்கையர் நந்தவனம் 80%, சிறுதூறல் 40% என்ற அடிப்படையில் நிகழ்ச்சிகள், ஆய்வாளரால் முன்வைக்கப்பட்ட சமூக வானொலிப் பண்புகளோடு பொருத்தமுடைய பண்புகளைக் கொண்டமைந்துள்ளதை வரைபு காட்டுகிறது.

வரைபு 06 – ஊவா சமூக வானொலியில் சனிக்கிழமைகளில் ஒலிபரப்பாகும் நிகழ்ச்சிகள் கொண்டுள்ள சமூக வானொலிப் பண்புகளை வரைபு 06 காட்டுகிறது. இதற்கமைய பக்தி பாடல்கள் 20%, நலமான வாழ்வு 80%, மக்கள் நாதம் 50%, இன்று முதல் இணையத்தளம் 40%, விஷேட நேர்காணல் 80%, சித்திர சிட்டுக்கள் 80%, மறுமலர்ச்சி 90%, புன்னகை தேசம் 90%, நங்கையர் நந்தவனம் 80%, சிறுதூரல் 40% என்ற அடிப்படையில் நிகழ்ச்சிகள் ஆய்வாளனால் முன்வைக்கப்பட்ட சமூக வானொலிப் பண்புகளோடு பொருத்தமுடைய பண்புகளைக் கொண்டமைந்துள்ளன.

**ஊவா சமூக வானொலி கொண்டுள்ள சமூக வானொலிக்கான பண்புகளை பகுப்பாய்வு செய்தல்.**

- ***குரலற்ற மக்களின் குரலாக அமைதல்***

குரலற்ற மக்களின் குரலாக அமைதல் எனும் பண்பினை ஊவா சமூக வானொலியில் காணப்படுகின்றமை தொடர்பில் ஆராயும் போது, இப் பண்பு ஊவா சமூக வானொலியின் நிகழ்ச்சிகளில் காணப்படுகின்றது என்பது ஆய்வாளரினால் அவதானிக்கப்பட்டது. திங்கட்கிழமை ஒலிபரப்பாகும் மாறிவரும் உலகம், செவ்வாய்க்கிழமை ஒலிபரப்பாகும் இராக்கவி, புதன்கிழமைகளில் ஒலிபரப்பாகும் இருமுகம், வியாழக்கிழமைகளில் ஒலிபரப்பாகும் மாலை மகுடம், வெள்ளிக்கிழமைகளில் ஒலிபரப்பாகும் குரலுக்கோர் அங்கிகாரம், சனிக்கிழமை நிகழ்ச்சிகள் ஆகியவை மலையக மக்களின் பிரச்சினைகளை பேசுவதாக அமைகிறது. இவ்வாறு குரலற்ற மக்களின் குரல்களை வெளிக்கொண்டு வருவதாக ஊவா சமூக வானொலியின் நிகழ்ச்சிகள் அமைகின்றன.

மக்களின் குரல்களில் வெளிக்கொண்டு வராத பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டு நிகழ்ச்சிகள் மக்களின் கருத்துக்களை கேட்கும் கலந்துரையாடல் நிகழ்ச்சிகளாகவும் ஒலிபரப்பாகின்றன. அவ்வகையில் மண்சரிவு அபாயம் என்ற தலைப்பின் கீழ் அமைந்த இராக்கவி நிகழ்ச்சி மக்களின் மனநிலைகளையும், லயன் வாழ்க்கையின் அவலங்களையும் எடுத்துக்காட்டுவதாக அமைந்திருந்தது. இவ்வாறு மக்களின் பிரச்சினைகளை வெளிக்கொண்டு வரும் பிரதிநிதியாக ஊவா சமூக வானொலி செயற்பட்டு குரலற்ற மக்களுக்கான குரலாக வெளிவருவது ஆய்வாளரினால் அவதானிக்கப்பட்டது.

○ **இலாப நோக்கமற்று செயற்படுதல்**

மக்களை திருப்திப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு இயங்கிவரும் ஊவா சமூக வானொலி இலாப நோக்கமற்று செயற்படும் பண்பினை சில நிகழ்ச்சிகளில் உள்வாங்கியுள்ளதுடன் ஆய்வாளரின் அவதானிப்பிற்கமைய சில நிகழ்ச்சிகள் இலாப நோக்கமற்று சமூகத்திற்காக இயங்கும் பண்பினைக் கொண்டுள்ளன. திங்கட்கிழமைகளில் இன்னிசைத் திருமகள் சினிமா உலகம் ஆகிய நிகழ்ச்சிகளும், செவ்வாய்க்கிழமைகளில் இசையருவி, இராக்கவி, புதன்கிழமைகளில் இரவோடு உறவாடு, இருமுகங்கள், வியாழக்கிழமைகளில் மாலை மகுடம், தீன் மணம், நெஞ்சம் மறப்பதில்லை, வெள்ளிக்கிழமைகளில் இதயம் கேட்டவை, நட்சத்திர தாலாட்டு, சனிக்கிழமைகளில் பக்திப்பாடல், நங்கையர் நந்தவனம், சிறுதூறல் ஆகிய நிகழ்ச்சிகள் விளம்பரங்களை ஒலிபரப்புகிறது.

ஏனைய நிகழ்ச்சிகள் மக்கள் சார்ந்த பிரச்சினைகளை முன்வைக்கும் போது விளம்பரங்களை விட மக்களின் கருத்துக்களுக்கே முன்னுரிமை வழங்குகின்றது. அவ்வகையில், ''நாங்கள் விளம்பரங்களை சில கட்டுப்பாடுகளை முன்வைத்தே உள்வாங்கிக் கொள்கிறோம். சமூகத்திற்கு பயனுள்ள விளம்பரங்களைத் தான் ஒலிபரப்புகின்றோம். ஊவா சமூக வானொலி தொடர்ச்சியான நிலைத்திருப்பிற்கான வருமானமாக விளம்பரங்கள் அமைகிறதே தவிர இலாபம் ஈட்டுவது எங்களின் நோக்கமல்ல. மலையகத்திலுள்ள பல பின்தங்கிய கிராமங்களில் இடம்பெறும் முக்கிய நிகழ்வுகளை நாங்கள் எந்தவித கட்டணமும் இன்றி நேர்முக வர்ணனை செய்கிறோம். எங்களின் நோக்கம் சமூகத்தை சார்ந்ததே தவிர இலாபத்தை சார்ந்தது அல்ல என பாத்திமா ரிஸ்வானா தனது நேர்காணலில் குறிப்பிட்டார். ஒலிபரப்பாகும் விளம்பரங்களும் கவர்ச்சித்தன்மை கொண்டதாக அமையாமல் தகவலை மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும் என்பற்கமைய ஒலிபரப்பாகியமை ஆய்வாளரினால் அவதானிக்கப்பட்டது.

○ ***உள்ளூர் மொழி மற்றும் அடையாளத்தை வெளிப்படுத்தல்***

உள்ளூர் மொழிகளும் வெளிப்பாடுகளும் சமூக வானொலியை வாழவைக்கும் மூலப்பொருட்களாகும். ஊவா சமூக வானொலியின் நிகழ்ச்சிகள் உள்ளூர் மொழியையும் அடையாளத்தையும் வெளிப்படுத்தும் பண்பினைக் கொண்டிருந்தன. அவ்வகையில் 19.09.2023 அன்று ஒலிபரப்பாகிய மாறி வரும் உலகம் நிகழ்ச்சியில் 'அர்ச்சுனன் தபசு' அருகி வரும் நிலையை வெளிக்காட்டும் வகையில் ஒலிபரப்பாகியமையை அவதானிக்கக்கூடியதாகவிருந்தது. இந் நிகழ்ச்சி முழுவதும் மலையக மக்களின் பேச்சு மொழியில் ஒலிபரப்பப்பட்டதுடன், தற்காலத்தில் அருகி வரும் கலையின் பரிதாப நிலையை பாடல்களாக வெளிப்படுத்தி மலையகத்தின் அடையாளத்தையும் வெளிப்படுத்தியிருந்தனர். நிகழ்ச்சியானது தற்போது மலையக மக்கள் கலைகளிலிருந்து விடுபட்டு அடையாளத்தை மறந்து வாழும் நிலை உருவாகி வருகின்றமையையும் நிகழ்ச்சி சுட்டிக்காட்டியது.

புதன்கிழமைகளிலும், வியாழக்கிழமைகளிலும் ஒலிபரப்பாகும் நிகழ்ச்சிகள் உள்ளூர் மொழியைக் கொண்டிருப்பதில்லை. பொதுமொழியில் நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாகியது. ''நாங்கள் ஆரம்பத்தில் நிகழ்ச்சிகளை மலையக மக்களின் பேச்சு மொழியில் ஒலிபரப்பாக்கினோம். தற்போது பொது மொழியை பயன்படுத்துவதற்கு காரணம் ஏனைய வானொலிகளின் வருகையாகும். எல்லோரும் நிகழ்ச்சிகளைக் கேட்க வேண்டும் என்றால் மலையக மக்கள் சார்ந்து நிகழ்ச்சிகளைப் படைத்தாலும் அவற்றை வெளிக்கொண்டு வருவதற்கு பொதுமொழியே அவசியமாகிறது என **பாத்திமா ரிஸ்வானா** குறிப்பிட்டார். மேலும், ''நாங்கள் எவ்வளவு பேச்சு மொழியை பயன்படுத்தினாலும் எழுத்து மொழியில் தான் எழுதுகிறோம். பல நிகழ்ச்சிகள் சமூகம் சார்ந்த நிகழ்ச்சிகளாக அமைகின்றன. மலையக பாடசாலைகளின் தமிழ் மொழியின் நிலை பற்றி எல்லோருக்கும் தெரியும். எனவேதான் பாடசாலை மாணவர்கள் சரியான உச்சரிப்பை தெரிந்துக் கொள்ள வேண்டும் என்ற சமூக நோக்கத்துடன் பொதுமொழியை பயன்படுத்துகிறோம் என **முஹமட் ரமீஸ்**'' குறிப்பிட்டார். பாடசாலை மாணவர்கள் சரியான உச்சரிப்புடன் மொழியை பயன்படுத்த வேண்டும் என்ற அடிப்படையில் செயற்பட்டு வருகின்றனர்.

உள்ளூர் நிகழ்ச்சிகளை வழங்குவதன் மூலம் மலையகத்தின் மொழி அடையாளத்தை வெளிப்படுத்தும் அதே வேளை மாணவர்களின்

நலனிலும் அவர்களின் மொழி வளத்தின் அக்கறையின் அடிப்படையிலும் நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாகின்றமையை அவதானிக்க முடிந்தது.

○ ***பல்வேறு நிகழ்ச்சிகளைக் கொண்டிருத்தல்.***

சமூக வானொலியின் ஒட்டுமொத்த பணி சமூகத்தை வலுவடையச் செய்தலாகும். சகல துறைகளிலும் மக்களை ஆற்றல் மிக்கவராக மாற்றக்கூடிய விடயங்களை வேறுபட்ட சமூக நிகழ்ச்சிகளின் மூலம் ஊவா சமூக வானொலி மேற்கொள்கிறது. கல்வி, சுகாதாரம், அரசியல், பொழுதுபோக்கு, சட்டங்கள், துறைசார்ந்தோர், பொருளாதாரம், கலைகள், பாரம்பரியம், சமூக பிரச்சினைகள் போன்ற பல்வேறு உள்ளடக்கங்களைக் கொண்டதாக ஊவா சமூக வானொலியின் நிகழ்ச்சிகள் அமைகின்றன.

சிறுவர்கள், பெரியோர்கள், மாணவர்கள், பெண்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள் எனப் பல்வேறுபட்டவர்களை அடிப்படையாகக் கொண்டு நிகழ்ச்சிகள் படைக்கப்படுகின்றன. ‘‘நாங்கள் நிகழ்ச்சிகளில் ஆரம்ப காலத்தை போல மக்களின் குரல்களை மட்டும் ஒலிபரப்புவது இல்லை. நேர்காணல்கள், கலந்துரையாடல்கள், அனுபவப் பகிர்வுகள், கலைகளை வெளிப்படுத்தும் போது நாட்டுப்புறப் பாடல்கள் எனப் பல்வேறு வடிவங்களில் நிகழ்ச்சிகளை மக்களிடம் கொண்டு சேர்க்கிறோம்’’ என கணேசன் மகாதேவன் குறிப்பிட்டார். மலையக மக்களின் வாழ்வியல் சார்ந்த பிரச்சினைகளை மட்டுமல்ல, திறமையாளர்கள், துறைசார்ந்து பயணிப்பவர்களையும் வெளிக்கொண்டு வருவதற்காக இருமுகங்கள், நெஞ்சம் மறப்பதில்லை, விசேட நேர்காணல் போன்ற நிகழ்ச்சிகளையும் ஊவா சமூக வானொலி ஒலிபரப்புகின்றமையை கண்டறிய முடிகிறது.

○ ***சிறுபான்மைக் குழுக்களுக்கு இடமளித்தல்***

ஓரங்கட்டப்பட்ட சமூகக் குழுக்களை தகவல் பரிமாற்றல் செயற்பாட்டில் பங்கேற்கச் செய்வதன் வாயிலாக சமூக வானொலி ஒருமைப்பாட்டிற்கான கருவியாக செயற்பட முடியும் என்ற அடிப்படையில் ஊவா சமூக வானொலி சிறுபான்மைக் குழுக்களுக்கு இடமளிக்கும் பண்பினைக் கொண்டுள்ளது. அதிகரித்த மழை காரணமாக பாதிப்படைந்த விவசாயிகளின் பொருளாதாரத்தை காட்டும் நிகழ்ச்சியாக புன்னகை தேசம் என்ற நிகழ்ச்சி அமைந்திருந்தது. வளர்ந்து வரும் எழுத்தாளர்களுக்கான அங்கீகாரத்தை பெற்றுக் கொடுக்கும் நிகழ்ச்சியாக இருமுகங்கள் என்ற நிகழ்ச்சி ஒலிபரப்பாகியது. இவ்வாறு சிறுபான்மை மக்களை மையப்படுத்திய நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாகியமை ஆய்வாளனினால் அவதானிக்கப்பட்டது.

நிகழ்ச்சிகள் மக்களின் பின்னூட்டங்களை தொலைபேசி வாயிலாக உடனுக்குடன் பெற்றுக்கொள்வதுடன் சில முக்கிய நிகழ்ச்சிகளில் எழும் சந்தேகங்கள் கடிதங்கள் மூலம் மக்களிடம் இருந்து கிடைக்கப்பெறுகின்றன. ‘‘நாங்கள் தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பாக முழுத்தெளிவினை மக்கள் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காக சங்கமம் என்ற நிகழ்ச்சி மூலம் தகவல்களை வழங்குகின்றோம். அந்த நிகழ்ச்சியில் உடனுக்குடன் மக்களை இணைத்துக் கொள்ள எங்களால் முடியாது. காரணம் சகோதர மொழி பேசும் ஒருவரை நேர்கண்டு பெறும் தகவல்களை தமிழ் மொழியில் உடனுக்குடன் நேயர்களுக்கு தருவதனாலாகும். எனவே மக்களின் சந்தேகங்கள் கடிதங்கள் மூலம் எமக்கு கிடைக்கப்பெறுகின்றன.’’ என சுப்ரமணியம் அசோகன் குறிப்பிட்டார். ஆய்வாளனின் அவதானத்திற்கமைய ஆரம்ப காலம் தொடங்கி இன்று வரையில் கடிதங்கள் மூலம் மட்டுமே தொடர்பு கொள்ளும் நேயர்களும் காணப்படுகின்றனர்.

சாதாரண மக்களின் பிரச்சினைகளை வெளிக்கொண்டு வருவதுடன் மக்களின் கலை, கலாச்சார நிகழ்வுகளின் போதும் மக்களுடன் இணைந்து பின்தள்ளப்பட்ட மக்களின் கருத்துக்களை பல்வேறுப்பட்ட முறையில் நிகழ்ச்சிகள் மூலம் வெளிக்கொண்டு வருவதற்காக ஊவா சமூக வானொலி செயற்படுகிறது என்பது ஆய்வாளனினால் அவதானிக்கப்பட்டது.

○ ***சமூகத்தின் கல்வி, அறிவை மேம்படுத்தல்***

ஊவா சமூக வானொலி மக்களின் அறிவினை துறை சார்ந்து விருத்தி செய்வதுடன் விழிப்புணர்வு சார்ந்த நிகழ்ச்சிகளையும் வழங்குகின்றது. **(அவதானம்** - நலமான வாழ்வு நிகழ்ச்சி மலையக மக்களின் முறையற்ற சுகாதார பழக்கங்களால் ஏற்படும் நோய்த்தாக்கங்கள் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சியாக அமைந்தது. புதன்கிழமை ஒலிபரப்பாகும் மாலை மகுடம் நிகழ்ச்சி அதிகரித்து வரும் மழையினால் டெங்கு நுளம்புகளின் தாக்கம் தொடர்பில் விழிப்புணர்வு நிகழ்ச்சியாக அமைந்தது. அனர்த்தங்கள், மண்சரிவு அபாயம், வீதிவிபத்துக்கள் போன்ற விடயங்களை மக்களுக்கு அறிவூட்டும் வகையில் நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாகின.) இவ்வாறு மக்களின் அறிவு விருத்தியை மேற்கொள்ளும் வகையில் நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாகின்றது.

**பாத்திமா ரிஸ்வானா** ‘‘நாங்கள் மாணவர்களை முதன்மைப்படுத்தியே எப்போதும் செயற்படுகிறோம். கொரோனா காலத்தில் முழுநேரமும் பாடசாலை மாணவர்களுக்கான கல்வி நிகழ்ச்சிகள் மட்டுமே ஒலிபரப்பாகியது.

தற்போது புலமைப் பரீட்சை மாணவர்கள், சாதாரணத்தரம், உயர்தர மாணவர்களுக்கு வழிக்காட்டல் நிகழ்ச்சிகளை விசேட நிகழ்ச்சிகளாக வழங்குகின்றோம். கல்வி நடவடிக்கைகள் சார்ந்தும் மாணவர்களின் அறிவு மட்டத்தை விருத்தி செய்வதுடன், சூழல் மற்றும் சுகாதாரம், பழக்கவழக்கங்கள் போன்றவற்றைக் கூறுவதன் மூலம் மக்களை விழிப்படையச் செய்வதுடன் குறித்த விடயம் தொடர்பான அறிவினை வழங்கும் செயற்பாட்டினையும் மேற்கொள்கிறோம்'' எனக் குறிப்பிட்டார். ஊவா சமூக வானொலி கல்வி, அறிவினை விருத்தி செய்யும் செயற்பாடுகளையும் மேற்கொள்கிறது என்பது ஆய்வாளரினால் கண்டறியப்பட்டது.

○ ***நல்லாட்சியை ஊக்குவித்தல்***

ஓரங்கட்டப்பட்ட மக்களின் முறைப்பாடுகளை தெரிவிப்பதற்கான வாயிலாக ஊவா சமூக வானொலி செயற்படுகிறது. மக்களின் பிரச்சினைகளை வெளிக்கொண்டு வருவதுடன் பிரச்சினைகளுக்கான தீர்வுகளையும் உரிய அதிகாரிகளிடமிருந்து பெற்றுக் கொடுத்துள்ளது. ''ஊவா சமூக வானொலி லயன் வீடுகளுக்கு கூரை அமைத்துக் கொடுத்தல், வீதி புணரமைப்பு, பாடசாலை மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்குதல் போன்ற விடயங்களை குறித்த அதிகாரிகளின் தலைமையின் கீழ் முன்னெடுத்துள்ளது.'' என கந்தையா தர்மர் குறிப்பிட்டார். மக்கள் சார்ந்த பிரச்சினைகளை பேசி மக்களுக்கும் நிறுவனங்களுக்குமான தொடர்பினை உருவாக்கும் செயற்பாட்டினையும் ஊவா சமூக வானொலி மேற்கொள்கிறது.

(**அவதானம் -** சுகாதாரம் மற்றும் உளவியல் துறை சார்ந்தோரின் நிகழ்ச்சிகளின்போது அவர்களை தனிப்பட்ட ரீதியில் தொடர்பு கொள்ளும் தொலைபேசி இலக்கங்கள் மற்றும் வைத்தியசாலைகளின் விலாசம் போன்றவற்றை நிகழ்ச்சியின் போது வழங்குதல்.) மக்களுக்கும் ஏனைய நிறுவனங்களுக்குமான உறவு நிலையை ஏற்படுத்துவதுடன் சமூகத்துடன் நெருங்கிய தொடர்பினைப் பேணவும் மக்களுக்கு வழிக்காட்டுகிறது.

(**அவதானம்** - தகவல் அறியும் உரிமைச் சட்டம் பற்றிய தெளிவினை சங்கமம் நிகழ்ச்சியின் மூலம் மக்களுக்கு அளிக்கிறது.) மக்களின் உரிமைகள் மற்றும் கருத்துக்களைப் பெற்றுக் கொள்வதற்கான வழிமுறைகளைக் கூறுவதுடன் அவற்றை உரிய முறையில் கையாள்வதன் மூலம் அரசசார் நிறுவனங்களுடன் எவ்வாறு தொடர்பினை பேண முடியும் என்பதையும் தெளிவுபடுத்துகிறது. இவ்வாறு ஊவா சமூக வானொலி மக்களுக்கு நல்லாட்சியை ஊக்குவிக்கும் செயற்பாட்டினை மேற்கொள்கிறது என்பது ஆய்வாளனினால் அடையாளப்படுத்தப்படுகிறது.

○ ***உள்ளூர் கலாச்சாரத்தை வெளிப்படுத்தல்***

பன்மைத்துவ சமூகத்தின் கலாச்சாரங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பண்பினை ஊவா சமூக வானொலி கொண்டுள்ளது. (**அவதானம்** - இரவோடு உறவாடு நிகழ்ச்சி மலையகத்தில் வாழும் மக்களின் உறவு சார்ந்த திருமண முறைகள் தொடர்பான நிகழ்ச்சியாக அமைந்தது.) ஒவ்வொரு மதத்தினரும் திருமணங்களின் போது மேற்கொள்கின்ற சடங்கு முறைகள் மற்றும் அதற்கான காரணங்கள் தொடர்பில் அமைந்த நிகழ்ச்சியானது உள்ளூர் கலாச்சாரத்தை பிரதிபலிப்பதாக அமைந்திருந்தது.

**பாத்திமா ரிஸ்வானா** ''பல்லின மக்கள் கொண்ட மலையகத்தில் எல்லோரையும் உள்ளடக்கிய நிகழ்ச்சிகளை நாங்கள் ஒலிபரப்புகின்றோம். சனிக்கிழமைகளில் காலை ஒலிபரப்பாகும் பக்திப் பாடல்கள் மலையகத்தில் வாழும் நான்கு மதங்களையும் உள்ளடக்கிய நிகழ்ச்சியாக அமைகிறது.'' எனக் குறிப்பிட்டார். மலையகத்திலுள்ள மக்களின் கலாச்சாரத்தை வெளிக்கொண்டு வருவதன் மூலம் அவற்றை பாதுகாக்கும் தன்மை காணப்படுகிறது.

(**அவதானம்** - மறுமலர்ச்சி என்ற நிகழ்ச்சி மதகுருமார்களிடம் மதம் தொடர்பான கருத்துக்களைக் கேட்டு அவை தற்காலத்தில் எவ்வாறு மக்களிடம் நலிவடைந்துள்ளது தொடர்பான கலந்துரையாடல் நிகழ்ச்சி) மக்கள் மதங்களின் வழிக்காட்டல்களைப் பின்பற்றுவது தொடர்பிலும் தற்போதுள்ள இளைய தலைமுறையினர் தொடர்பாகவும் உள்ளூர் காலாச்சாரத்தை அடிப்படையாகக் கொண்ட நிகழ்ச்சியாக அமைந்திருந்தது.

காமன் கூத்து, அர்சுனன் தபசு போன்ற கூத்து வகைகளினால் எவ்வாறு கலாச்சாரங்கள் நலிவடைந்து செல்கின்றன என்பதையும் நிகழ்ச்சிகளில் வெளிக்கொண்டு வரப்பட்டது. இதற்கமைய அவதானத்தின்படி, உள்ளூர் கலாச்சாரத்தை பாதுகாக்கும் செயற்பாடுகளை ஊவா சமூக வானொலி முன்னெடுக்கிறது என்பதை ஆய்வாளனால் அவதானிக்கப்பட்டது.

○ **உள்ளூர் அபிவிருத்தியில் பங்கு வகித்தல்**

அபிவிருத்திக்கான ஒரு சூழ்நிலையை சமூக வானொலிகள் தனது நிகழ்ச்சிகளின் வாயிலாக முன்னெடுக்கிறது. ஊவா சமூக வானொலி உள்ளூர் அபிவிருத்தியில் பங்கு வகிப்பதுடன் நிகழ்ச்சிகளின் மூலம் அபிவிருத்தி சார்ந்த செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக மக்களை

தூண்டுகிறது. **முஹமட் ரமீஸ்** "நாங்கள் பின்தங்கிய பாடசாலை மாணவர்களுக்கு ஒவ்வொரு வருடத்தின் இறுதியிலும் பாடசாலை உபகரணங்களை சமூக வானொலி சார்ந்து வழங்கி வருகின்றோம். பாடசாலைகளில் கருத்தரங்குகளை ஒழுங்கமைத்து முறையான ஆசிரியர்களைக் மூலம் வழிநடத்துக்கின்றோம்." எனக் குறிப்பிட்டார். எதிர்கால மாணவர்களை மையப்படுத்தி கல்வி சார்ந்த விடயங்களின் மூலமான அபிவிருத்தி மேற்கொள்ளப்படுகிறது.

**சுப்ரமணியம் அசோகன்** "கிராமங்களுக்குச் சென்று மக்களின் குடிநீர் பிரச்சினையை அடையாளம் கண்டு அவற்றை உரிய அதிகாரிகளிடம் முறையிட்டு நாங்களே முன்னின்று பல கிராமங்களுக்கு குடிநீர் வசதிகளைப் பெற்றுக் கொடுத்துள்ளோம். இன்றும் பல சமூக தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து மழைக்காலங்களில் வீதிகளில் பயணிக்கும் போது மக்கள் எதிர்நோக்கும் அசௌகரியங்களை நேரடியாக முகநூல் பக்கத்தில் பதிவு செய்து மக்களுக்கான அபிவிருத்திக்கு வழிவகுக்கும் செயற்பாடுகளை முன்னெடுக்கின்றோம்." எனக் குறிப்பிட்டார். பின்தங்கிய மக்களின் வாழ்வாதார அபிவிருத்திச் செயற்பாடுகளை முன்னெடுக்கும் வகையில் ஊவா சமூக வானொலியின் செயற்பாடுகள் அமைகின்றன.

(**அவதானம்** - சுகாதாரம், கல்வி, பொருளாதாரம், சட்டங்கள், ஆன்மீகம் விளையாட்டு போன்ற தனிநபர் விருத்திக்கான செயற்பாடுகளை முன்னெடுக்கிறது.) மக்களின் மனங்களில் மாற்றங்களை ஏற்படுத்தும் அறிவூட்டல் நிகழ்ச்சிகளை வழங்குவதனூடாக தனிமனித அபிவிருத்தியிலும் பங்கு வகிக்கிறது. உள்ளூர் அபிவிருத்தியை சமூகம் சார்ந்தும், தனிநபர் சார்ந்தும் ஊவா சமூக வானொலி மேற்கொள்கிறது என்பது ஆய்வாளனால் கண்டறியப்பட்டது.

○ ***சுயாதீனமாக இயங்குதல்***

அதிகாரிகளின் கட்டுப்பாட்டிலிருந்து விடுபட்டு சுயமாக இயங்கும் தன்மையை ஊவா சமூக வானொலிக் கொண்டிருக்கிறது. (**அவதானம்** - ஊவா சமூக வானொலியில் பெருந்தோட்ட தொழிலாளர்களின் வைத்தியசாலை பிரச்சினைகளை வெளிக்கொண்டு வருதல்.) சமூகத்திலுள்ள பிரச்சினைகளை மக்கள் சுட்டிக்காட்டும் போது அதிகாரிகளை தைரியமாகக் கூறுகின்றனர். நிகழ்ச்சிகள் மூலமாகவும் அவற்றை முழுமையாக ஒலிபரப்புகின்றனர்.

**புஸ்பநாதன் தேவருக்சன்** "ஊவா மாகாண சபையின் கீழ் நாங்கள் செயற்பட்டாலும் எங்களின் நிகழ்ச்சி வெளிப்படுத்தல்களிலும், தயாரிப்பிலும், மக்களை சந்தித்து மக்களின் பிரச்சினைகளை வெளிக்கொண்டு வருவதற்கும் அதிகாரிகளால் எந்த தடையும் எங்களுக்கு இல்லை. நாங்கள் சுயமாகவே இயங்குகின்றோம். எங்களின் நிகழ்ச்சிகள் எவ்வாறு அமைய வேண்டும் என்பதை நாங்களே தீர்மானித்துக் கொள்கிறோம்." எனக் குறிப்பிட்டார். இதற்கமைய, நிகழ்ச்சிகளை வெளிக்கொண்டு வரும் போது அதிகாரிகள் சார்ந்த தலையீடு இல்லாமல் சுதந்திரமாக நிகழ்ச்சிகளைத் தயாரிக்கும் தன்மைக் காணப்படுகிறது.


(**அவதானம்** - சித்திரச் சிட்டுக்கள் நிகழ்ச்சியைத் தயாரித்து வழங்கும் மாணவி தரம் 09 ல் கல்விக் கற்பவர்.) மக்கள் சாதாரணமாக சென்று சமூக நிகழ்ச்சிகளைப் படைக்ககூடிய சுதந்திரமும் காணப்படுகிறது. ஊவா சமூக வானொலி மக்களின் பிரச்சினைகளையும் மக்கள் சார்ந்த விடயங்களையும் அபிவிருத்தி செயற்பாடுகளையும் நிறுவனங்கள் சார்ந்தும், அதிகாரிகள் சார்ந்தும் முன்னெடுக்கும் போதும், நிகழ்ச்சிகளைப் படைக்கும் போதும் சுயமாக இயங்கும் தன்மையைக் கொண்டுள்ளது என்பது அவதானிப்பின் மூலம் ஆய்வாளர் கண்டறிந்த விடயமாகும்.

இதற்கமைய ஆய்வாளனினால் முன்வைக்கப்பட்ட பத்து சமூக வானொலிப் பண்புகளில் ஐந்து பண்புகளுக்கு மேல் பொருத்தமான பண்புகளைக் கொண்டு ஒலிபரப்பாகும் திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி ஆகிய கிழமைகளில் நிகழ்ச்சிகள் கொண்டுள்ள சமூக வானொலிப் பண்புகள் சதவீதத்தின் அடிப்படையில கீழ்வருமாறு காட்ட முடியும்.

ஆய்வாளரினால் முன்வைக்கப்பட்ட சமூக வானொலிப் பண்புகளில் ஐந்து பண்புகளுக்கு மேல் பொருந்தும் நிகழ்ச்சிகளின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு, திங்கள் 60%, செவ்வாய் 40%, புதன் 80%, வியாழன் 80%, வெள்ளி 60%, சனி 90% ஆகிய சதவீதத்தின் அடிப்படையில் வரைபு காட்டியுள்ளது.

திங்கள் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் மூன்று நிகழ்ச்சிகளும், செவ்வாய்க் கிழமைகளில் இரண்டு நிகழ்ச்சிகளும், புதன் மற்றும் வியாழக்கிழமைகளில் நான்கு நிகழ்ச்சிகளும், சனிக்கிழமைகளில் ஏழு நிகழ்ச்சிகளும், ஆய்வாளனினால் முன்வைக்கப்பட்ட பத்து சமூக வானொலிப் பண்புகளில் ஐந்து பண்புகளுக்கு மேல் பொருத்தமுடைய நிகழ்ச்சிகளாக அமைகின்றன. இதனடிப்படையில் 50% ற்கும் அதிகமான சமூக வானொலிப் பண்புகளைக் கொண்டுள்ள நிகழ்ச்சிகள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. சனிக்கிழமை

நிகழ்ச்சிகள் காலை 5.30 மணி முதல் இரவு 12 மணி வரை ஒலிபரப்பாகியதுடன், ஏனைய கிழமைகளின் நிகழ்ச்சிகள் இரவு 7 மணித் தொடக்கம் 12 மணி வரையில் ஒலிபரப்பாகிறது என்பதையும் ஆய்வாளர் அவதானிப்பில் கண்டறிந்துள்ளார்.




**வரைபு 07.** ஊவா சமூக வானொலி நிகழ்ச்சிகளின் சமூக வானொலிப் பண்புகள் (சதவீதத்தின் அடிப்படையில்)

### 3.1 ஊவா சமூக வானொலியின் தோற்றமும் பின்னணியும்

இலங்கையில் சமூக வானொலிகள் தோற்றம் பெறுவதற்கு பின்னணியில் பல காரணங்கள் அமைந்திருந்தன. இருபது வருடங்கள் ஊவா சமூக வானொலியில் பணியாற்றும் **சுப்ரமணியம் அசோகனிடம் ஊவா வானொலியின் தோற்றம் பற்றி கேட்ட போது**, "பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் மிகவும் பாதிக்கப்பட்ட மாகாணமாக ஊவா மாகாணம் இருந்தமையினால் 1994 காலப்பகுதிகளில் ஊவா மாகாணத்தை மையப்படுத்தி அடிப்படை வசதிகள் சார்ந்த செயற்திட்டங்கள் ஐக்கிய நாடுகள் சபையினால் முன்னெடுக்கப்பட்டது. ஐந்து வருடங்களின் பின்னர், மக்கள் மத்தியில் செயற்திட்டம் தொடர்பான மதீப்பீட்டினை மேற்கொண்ட போது, செயற்திட்டம் முழுமையாக மக்களை சென்றடையவில்லை. மக்களின் தேவைகள் அறிந்து செயற்திட்டம் முன்னெடுக்கப்படவில்லை என்பதையும் செயற்திட்டத்தை முன்னெடுத்த குழு அறிந்துக் கொண்டது. மக்களின் கருத்துக்களையும், பிரச்சினைகளையும் பேசுவதற்கு சமூக மட்டத்திலிருந்து ஊடகங்கள் செயற்பட வேண்டும். என்பதை கருத்திற் கொண்டு யுனெஸ்கோ நிறுவனம் ஊவா சமூக வானொலியை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டது. இம் முயற்சியில் ஊவா மாகாண சபை மற்றும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், ஆகிய நிறுவனங்களும் இணைந்துக் கொண்டது."எனக் குறிப்பிட்டார்.

#### 3.1.1 ஊடக உரிமையாண்மை

ஊடகங்கள் உரிமையாண்மையின் கீழ் தொழிற்படுவது வழக்கமான விடயமாகும். அந்த வகையில் ஊவா சமூக வானொலியும் உரிமையாண்மையின் கீழ் செயற்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

ஊவா சமூக வானொலியின் உரிமையாண்மை பற்றி நிகழ்ச்சித் தயாரிப்பாளர் **சுப்ரமணியம் அசோகன் குறிப்பிடுகையில்**, "பதுளை மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்களை மையப்படுத்தி வறுமை ஒழிப்புத் திட்டத்தை அமுல்படுத்துவதற்காக ஐக்கிய நாடுகள் அமைப்பின் கீழ், யுனெஸ்கோவின் உதவியுடன் ஊவா சமூக வானொலி ஸ்தாபிக்கப்பட்டது. ஊவா சமூக வானொலிக்கான அதிர்வெண்ணை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமும், கட்டிடம், மின்வசதி மற்றும் அடிப்படை வசதிகளை வழங்குவதில் ஊவா மாகாண சபையும் பொறுப்பேற்றது. ஊவா சமூக வானொலியின் அதிகாரம் ஊவா மாகாண சபையிடம் காணப்படுகிறது. ஊவா சமூக வானொலியானது முகாமையாளர், ஊழியர்கள் என்ற நிர்வாக கட்டமைப்பைக் கொண்டிருக்கிறது. ஊவா சமூக வானொலியின் முகாமையாளர் ஊவா மாகாண சபையின் கீழுள்ள கல்வி அமைச்சினால் இன்றுவரை நியமிக்கப்படுகின்றனர்." எனக் குறிப்பிட்டார். ஊவா சமூக வானொலியின் ஆசிரியர்பீடம் பற்றி ஊவா சமூக வானொலியில் இருபது ஆண்டுகள்

நிகழ்ச்சித் தயாரிப்பாளராக செயற்படும் **பாத்திமா ரிஸ்வானா குறிப்பிடுகையில்** "ஆரம்பக் காலத்திலிருந்து இன்று வரை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பிராந்திய வானொலி என்று ஊவா சமூக வானொலி அடையாளப்படுத்தப்படுகிறது. அது அப்படியல்ல வானொலி நிலையமொன்றை ஸ்தாபிப்பதற்கு அதிர்வெண் தேவை. இலங்கையில் இயங்கும் பண்பலை வானொலி நிலையங்களுக்கான அதிர்வெண்ணை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திடம் இருந்து மட்டுமே பெற முடியும் என்பதற்கமைய ஊவா சமூக வானொலிக்கான அதிர்வெண் 87.6fm அலைவரிசையை ஊவா மாகாண சபைக்கு வழங்கியதே தவிர இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் கட்டுப்பாட்டின் கீழ் ஊவா சமூக வானொலி இயங்கவில்லை. இன்று வரை ஊவா சமூக வானொலிக்கான அதிர்வெண்ணை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு பணம் செலுத்தியே பெற்றுக் கொள்கிறோம்." எனக் குறிப்பிட்டார்.

### 3.2 ஊவா சமூக வானொலியின் வளர்ச்சிக் கட்டங்கள்

ஊவா சமூக வானொலியின் செயற்பாடு இருபது வருடங்களாக தொடர்கிறது. இதனடிப்படையில், 2003 ஆம் ஆண்டு தொடக்கம் 2013 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதி முதல் பத்து வருடங்களாகும். இந்த காலக்கட்டங்களில் ஊவா சமூக வானொலி மேற்கொண்ட விடயங்களுள் முக்கியமானதாக அமைவது அறிவுக்கழகங்களை உருவாக்கியமையாகும்.

அறிவுக்கழகங்கள் பற்றி ஊவா சமூக வானொலியின் நிகழ்ச்சித் தயாரிப்பாளர் **கணேசன் மகாதேவன் குறிப்பிடுகையில்**, "நாங்கள் ஊவா மாகாண சபையுடன் இணைந்து பதுளை, மொனராகலை ஆகிய மாவட்டங்களிலுள்ள அனைத்து கிராமங்களையும் மையப்படுத்தி 178 அறிவுக்கழகங்களை உருவாக்கியது முதல் பத்து வருடங்களிலாகும்.

அந்தவகையில் 15 உறுப்பினர்களின் கீழ் தோற்றம்பெற்ற அறிவுக்கழகங்களை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு கிராமத்திலும் காணப்படுகின்ற மக்கள் சார்ந்த விடயங்கள் நிகழ்ச்சிகளாக ஒலிபரப்பாகியது. பின்தங்கிய கிராமங்களை விருத்தி செய்வதுடன், மக்களுடன் இணைந்து பணியாற்றி நெருங்கிய தொடர்பினை ஏற்படுத்திக் கொள்ளவும் சிறந்த அணுகுமுறையாக அறிவுக் கழகங்கள் எமக்கு உதவின. இவ்வாறு உருவாக்கப்பட்ட அறிவுக்கழகங்கள் இன்று இல்லை என்பதும் எங்களுக்கு பெரும் இழப்பாகும்." எனக் குறிப்பிட்டார்.

ஊவா சமூக வானொலி தனியான நிகழ்ச்சித் திட்டங்களை உருவாக்கியதும் முக்கியமான விடயமாகும். இது பற்றி ஊவா சமூக வானொலியின் நிகழ்ச்சி தயாரிப்பாளர் **புஸ்பநாதன் தேவருக்சன் குறிப்பிடுகையில்,** "நாங்கள் ஊவா சமூக வானொலிக்காக தனியான நிகழ்ச்சி வழிக்காட்டல்களை தயாரித்தோம். அவற்றின் உள்ளடக்கங்களில் பக்கசார்பற்ற தன்மை, வாய்மொழி மூலமான நிகழ்ச்சிகளை படைத்தல், செய்திகளை அடிப்படையாகக் கொண்டு நிகழ்ச்சிகளைத் தயாரித்தல், தனிப்பட்ட கருத்துக்களை கொண்ட நிகழ்ச்சிகளைத் தயாரித்தல், விசேடமான விடயப்பரப்பினைக் கொண்ட நிகழ்ச்சிகளைத் தயாரித்தல், மக்களின் பதில்களுக்கு இடமளித்தல், உண்மைத்தன்மை, பிழைகளை சரிப்படுத்தல், தனித்தன்மை, நன்நடத்தை போன்ற விடயங்களை அடிப்படையாகக் கொண்டிருந்தன. ஆரம்ப காலத்தில் ஊவா சமூக வானொலியின் நிகழ்ச்சிகள் யாவும் நிகழ்ச்சி வழிக்காட்டலுக்கு கீழ் தயாரிக்கப்பட்டது" எனக் குறிப்பிட்டார்.

## 4. முடிவுகளும் பரிந்துரைகளும்

பதுளை மொனராகலை ஆகிய இரு மாவட்டங்களையும் மையப்படுத்தி மக்களின் கருத்துக்களை வெளிக்கொண்டு வருவதற்கான நோக்கத்துடன் ஊவா சமூக வானொலி ஆரம்பிக்கப்பட்டது. இன்று வரை செயற்பாட்டைத் தொடர்வதற்கு ஊவா மாகாண சபை மற்றும் இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனம் ஆகிய இரு நிறுவனங்களின் ஒத்துழைப்பே காரணமாகும். 2003 தொடக்கம் 2023 வரையான இருபது வருடங்களில் 2013ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலப்பகுதியில் முழுமையான சமூக வானொலியாகச் செயற்பட்டுள்ளது. 2013ஆம் ஆண்டிற்கு பின்னர் அரசியல், பொருளாதார காரணங்களால் சமூக வானொலிப் பண்பிலிருந்து பின்நோக்கி செல்லும் தன்மையை ஊவா சமூக வானொலிக் கொண்டுள்ளது. என்ற முடிவு ஊவா சமூக வானொலியின் வரலாறு தொடர்பில் ஆய்வாளரினால் கண்டறியப்பட்டது.

இதற்கமைய, நிகழ்ச்சிகளை ஒப்பிட்டு பார்க்கும் போது, புதன் மற்றும் வியாழக்கிழமைகளில் ஓரளவிலாள சமூக வானொலிப் பண்புகளைக் கொண்ட நிகழ்ச்சிகளும் திங்கள் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் குறைந்தளவிலான சமூக வானொலிப் பண்புகளைக் கொண்ட நிகழ்ச்சிகளும் ஒலிபரப்பாகின்றன. ஏனைய கிழமைகளோடு ஒப்பிடுகையில், செவ்வாய்க்கிழமைகளில் மிகக்குறைந்த அளவிலான சமூக வானொலிப் பண்புகளைக் கொண்ட நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாகின்றன. என்பது ஆய்வாளரின் பகுப்பாய்விலிருந்து பெறப்பட்ட ஆய்வின் முடிவாகும்.

### 4.1 ஊவா சமூக வானொலி நிகழ்ச்சிகளின் சமூக வானொலிப் பண்புகள்

ஊவா சமூக வானொலியில் தற்போது ஒலிபரப்பாகின்ற நிகழ்ச்சிகள் ஆய்வாளனினால் பகுப்பய்வு செய்யப்பட்டன. இப் பகுப்பாய்வுக்கமைய சேகரிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் சமூக வானொலிக்கான பண்புகளாக அடையாளப்படுத்தப்பட்ட **குரலற்ற மக்களின் குரலாக அமைதல், இலாப நோக்கமற்று செயற்படுதல், உள்ளூர் மொழி மற்றும் அடையாளத்தை வெளிப்படுத்தல், பல்வேறு நிகழ்ச்சிகளைக் கொண்டிருத்தல், சிறுபான்மைக் குழுக்களுக்கு இடமளித்தல், சமூகத்தின் கல்வி, அறிவை மேம்படுத்தல், நல்லாட்சியை ஊக்குவித்தல், உள்ளூர் கலாச்சாரத்தை வெளிப்படுத்தல், உள்ளூர் அபிவிருத்தியில் பங்கு வகித்தல், சுயாதீனமாக இயங்குதல்** ஆகிய சமூக வானொலிப் பண்புகள் ஊவா சமூக வானொலியில் ஒலிபரப்பாகும் தமிழ்மொழி மூலமான நிகழ்ச்சிகளில் பொருத்திப் பார்க்கப்பட்டன. இதனடிப்படையில், திங்கட்கிழமைகளில் ஒலிபரப்பாகும் நிகழ்ச்சிகளாக இன்னிசைத்திருமகள் 40%, மாறிவரும் உலகம் 99%, சினிமா உலகம் 30%, இதயங்களே பேசுங்கள் 99%, நட்சத்திர தாலாட்டு 50% என்ற அடிப்படையில் சமூக வானொலிப் பண்புகளைக் கொண்டிருந்தன. திங்கட்கிழமை நிகழ்ச்சிகளில் மாறி வரும் உலகம் நட்சத்திர தாலாட்டு இதயங்களே பேசுங்கள் ஆகிய நிகழ்ச்சிகள் ஆய்வாளனினால் முன்வைக்கப்பட்ட சமூக வானொலிப் பண்புகளில் ஐந்துக்கும் மேற்பட்ட பண்புகளைக் கொண்டு ஒலிபரப்பாகிய நிகழ்ச்சிகளாக அமைகின்றன.

செவ்வாய்கிழமைகளில் ஒலிபரப்பாகும் நிகழ்ச்சிகளாக மாலை மகுடம் 50%, என்னைக் கவர்ந்த கானங்கள் 70%, மனசுக்கு பிடித்த பாடல் 40%, இசையருவி 20%, இராக்கவி 80% ஆகிய நிகழ்ச்சிகளில் இராக்கவி, என்னைக் கவர்ந்த கானங்கள் இரு நிகழ்ச்சிகளும் மக்களின் பிரச்சினைகளை பற்றிய நிகழ்ச்சியாக அமைந்திருந்ததுடன் ஆய்வாளனினால் முன்வைக்கப்பட்ட சமூக வானொலிப் பண்புகளுடன் அதிகமான பொருத்தங்களையும் கொண்டிருந்தது. ஆய்வாளனால் கண்டறியப்பட்டது. புதன் கிழமைகளில் ஒலிபரப்பாகும் நிகழ்ச்சிகளாக மாலை மகுடம் 70%, என்னைக் கவர்ந்த கானங்கள் 40%, சிகரம் தொடு 60%, இரவோடு உறவாடு 60%, இருமுகங்கள் 80% போன்ற நிகழ்ச்சிகளில் மலையக மக்களை பிரதிநிதித்துவப்படுத்துவதாக இருமுகங்கள், இரவோடு உறவாடு ஆகிய இரு நிகழ்ச்சிகளும் சமூகத்திற்கான நிகழ்ச்சியாக அமைந்ததுடன் சமூக வானொலிக்கான பண்புகளைக் கொண்டிருந்தன. வியாழக்கிழமைகளில் ஒலிபரப்பாகும் நிகழ்ச்சிகளாக மாலை மகுடம் 70%, தீன் மணம் 50%, சங்கமம் 60%, நெஞ்சம் மறப்பதில்லை 60% ஆகிய நிகழ்ச்சிகள் அமைந்துள்ளன. தீன் மணம் நிகழ்ச்சி தவிர ஏனைய நிகழ்ச்சிகள் மக்களின் பிரச்சினைகளைக் கொண்ட மலையகம் சார்ந்த விடயங்களை வெளிக்கொண்டு வரும் சமூக வானொலிப் பண்புகளைக் கொண்டிருக்கிறது.

வெள்ளிக்கிழமை மாலை மகுடம் 70%, குரலுக்கோர் அங்கிகாரம் 70%, இதயம் கேட்டவை 60%, நட்சத்திர தாலாட்டு 10% என்ற சதவீதத்தின் அடிப்படையில் சமூக வானொலிப் பண்புகளை ஆய்வாளன் அவதானித்துள்ளார். சனிக்கிழமைகளில் ஒலிபரப்பாகும் நிகழ்ச்சிகளாக பக்திப்பாடல்கள் 20%, நலமான வாழ்வு 70%, மக்கள் நாதம் 50%, இன்று முதல் இணையத்தளம் 50%, விசேட நேர்காணல் 80%, சித்திர சிட்டுக்கள் 80%, மறுமலர்ச்சி 90%, புன்னகை தேசம் 80%, நங்கையர் நந்தவனம் 70%, சிறுதூறல் 60% என்ற அடிப்பயையில் சமூக வானொலிப் பண்புகளைக் கொண்டு நிகழ்ச்சிகள் அமைந்திருந்தமை ஆய்வாளனினால் கண்டறியப்பட்டது.

இந் நிகழ்ச்சிகள் கொண்டுள்ள சதவீதத்தின் அடிப்படையில் ஒவ்வொரு நாளும் ஒலிபரப்பாகும் நிகழ்ச்சிகள் கொண்டுள்ள சமூக வானொலிப் பண்புகளின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு ஆய்வாளனால் முன்வைக்கப்பட்ட சமூக வானொலிப் பண்புகளில் ஐந்து பண்புகளுக்கு மேல் பொருத்தமுடைய கிழமை நிகழ்ச்சிகளை பகுப்பாய்வு செய்த போது திங்கட்கிழமைகளில் 60%, செவ்வாய்க்கிழமைகளில் 40%, புதன்கிழமைகளில் 80%, வியாழக்கிழமைகளில் 80%, வெள்ளிக்கிழமைகளில் 60%, சனிக்கிழமைகளில் 90% என்ற அடிப்படையில் சமூக வானொலிப் பண்புகளைக் கொண்டு நிகழ்ச்சிகள் அமைகின்றன என்பது ஆய்வாளரின் அவதானமாகும்.

இந் நிகழ்ச்சிகளின் ஒப்பீட்டளவில் சனிக்கிழமை நிகழ்ச்சிகள் ஆய்வாளனால் முன்வைக்கப்பட்ட சமூக வானொலிக்கான பண்புகளைக் அதிகமாகக் கொண்டுள்ளது. நிகழ்ச்சிகளை ஒப்பிட்டு பார்க்கும் போது, புதன் மற்றும் வியாழக்கிழமைகளில் ஓரளவிலாள சமூக வானொலிப் பண்புகளைக் கொண்ட நிகழ்ச்சிகளும் திங்கள் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் குறைந்தளவிலான சமூக வானொலிப் பண்புகளைக் கொண்ட நிகழ்ச்சிகளும் ஒலிபரப்பாகின்றன. ஏனைய கிழமைகளோடு ஒப்பிடுகையில், செவ்வாய்க்கிழமைகளில் மிகக்குறைந்த

அளவிலான சமூக வானொலிப் பண்புகளைக் கொண்ட நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாகின்றன.

உள்ளூர் மக்கள் சார்ந்த விடயங்கள் நிகழ்ச்சி உள்ளடக்கங்களில் காணப்படும் போது சமூக வானொலிப் பண்புகள் நிகழ்ச்சிகளில் அதிகமாகப் பிரதிபலிக்கின்றன. உள்ளூர் மக்கள் தவிர்ந்த ஏனைய விடயங்கள் நிகழ்ச்சி உள்ளடக்கங்களில் காணப்படும் போது குறைந்தளவிலான சமூக வானொலிப் பண்புகளோடு நிகழ்ச்சிகள் அடையாளப்படுத்தப்படுகின்றன. என்பது ஆய்வாளரின் பகுப்பாய்விலிருந்து பெறப்பட்ட ஆய்வின் முடிவாகும்.

மலையகத்தில் பல்வேறுக் கோணங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அரசியல், சமூகப்பிரச்சினைகள், பொருளாதாரம், மொழிப்பிரச்சினைகள் போன்ற பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆனால், ஊடகம் சார்ந்த ஆய்வுகள் இதுவரையில் மிகக் குறைவாகவே காணப்படுகிறது.

மலையகத்தில் இயங்கும் ஊடகங்கள் பற்றியும் அவற்றை மக்கள் நுகரும் வீதம் பற்றியும் ஊடகங்களின்பாலான மக்களின் விளங்கறிவு பற்றியும் இதுவரையிலும் ஆய்வுகள் முன்னெடுக்கப்படவில்லை. மலையக மக்களின் ஊடக நுகர்வுகள், மக்களிடம் ஊடகம் சார்ந்து காணப்படும் ஊடக விளங்கறிவு தொடர்பிலும், ஊடகங்கள் மலையக மக்களை சித்தரிக்கும் முறை, மலையக மக்கள் ஊடகங்களை நோக்கும் விதம் போன்றவைத் தொடர்பில் ஆய்வுகள் மேற்கொள்ளப்படலாம்.

பல்வேறுப்பட்ட ஊடகங்களின் வழியாக மக்கள் எதை பெற்றுக் கொள்கிறார்கள், மக்களின் தேவைகளையும் விருப்பங்களையும் பூர்த்தி செய்யும் ஊடகத் தெரிவாக அதிகம் காணப்படும் ஊடகத்தின் தன்மைகள் பற்றியும் ஆய்வுகள் மேற்கொள்ளப்படலாம். ஊடகங்களை மக்கள் நுகர்வதற்கான காரணங்கள், மலையகத்தில் ஊடக நுகர்வின் பலம் பலவீனம் போன்றவை தொடர்பிலும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட முடியும்.

ஊவா சமூக வானொலி ஓர் வரலாற்றுப் பார்வை எனும் ஆய்வு ஆய்வாளனினால் உள்ளடக்கப் பகுப்பாய்வாக மேற்கொள்ளப்பட்டது. ஊவா சமூக வானொலின் வரலாற்றைப் பற்றிய தரவுகளையும், ஒலிபரப்பாகும் தமிழ் மொழி மூலமான நிகழ்ச்சிகளையும் ஆய்வு செய்து திரட்டிக்கொண்ட தரவுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வாகும்.

எதிர்காலத்தில் ஊவா சமூக வானொலி சார்ந்து ஆய்வுகளை மேற்கொள்ளவுள்ள ஆய்வாளர்கள் இதனை பெறுநர் ஆய்வாகவும் முன்னெடுக்கலாம். ஊவா சமூக வானொலியின் நிகழ்ச்சிகள் எவ்வாறு மக்களிடத்தில் சென்றடைகிறது. உண்மையில் மக்கள் சார்ந்து செயற்படுகிறதா என்ற கருத்துக்களை வானொலி நேயர்களைக் கேட்டறிந்து நேயர்களின் கருத்துக்களையும், ஆதாரங்களையும் திரட்டி ஆய்வினை முன்னெடுக்கும் போது மேலும் பெறுமதிமிக்க ஆய்வாக அமையவும் வாய்ப்புக்கள் உள்ளன.

ஆய்வாளர் உள்ளடக்க ஆய்வுக்காக ஊவா சமூக வானொலியின் தமிழ் மொழி மூலம் ஒலிபரப்பாகும் நிகழ்ச்சிகளை மட்டுமே தெரிவு செய்து ஆய்வினை முன்னெடுத்துள்ளார். எதிர்காலத்தில் ஊவா சமூக வானொலியில் ஒலிபரப்பாகும் தமிழ் மற்றும் சிங்கள மொழியிலான நிகழ்ச்சிகளை உள்ளடக்கி ஆய்வுகளை மேற்கொள்ளலாம். ஊவா சமூக வானொலியில் ஒலிபரப்பாகும் துறை சார்ந்த நிகழ்ச்சிகளை மையப்படுத்தியும் ஆய்வுகளை முன்வைக்க முடியும். ஊவா சமூக வானொலி மற்றும் ஜனரஞ்சக வானொலியின் ஒற்றுமைகள் தொடர்பிலும் வேறுபாடுகள் தொடர்பிலும் ஆய்வு செய்யலாம், இணையத்தள சமூக வானொலி மற்றும் ஊவா சமூக வானொலி என்ற அடிப்படையிலும் ஆய்வுகளை முன்னெடுக்கலாம். இதற்கமைய, ஊவா சமூக வானொலி ஓர் வரலாற்றுப் பார்வை என்ற ஆய்விலுள்ள மேலதிகத் தேவைகளை சுட்டிக்காட்டி எதிர்கால ஆய்வுக்கான பரிந்துரைகளாக முன்வைக்கப்படுகின்றன.

## 5. உசாத்துணைகள்


நந்தகுமார்.வை. (2007). 'ஆய்வு முறையியல் - முறைகளும் நுட்பங்களும்', யுனி ஆட்ஸ் பிறைவெட் லிமிடெட், கொழும்பு, பக்.6-18.

பிரசாந்தினி.து. (2016). இலங்கை தமிழ் வானொலி ஊடகங்களில் உரையாடல் நிகழ்ச்சிகள் - ஓர் திறனாய்வு இவ் ஆய்வுக் கட்டுரையானது சிறப்பு கலைமானித் தேர்வின் ஒரு பகுதியை நிறைவு செய்யும் பொருட்டு யாழ்ப்பாண பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறைக்கு சமர்ப்பிக்கப்பட்ட பிரசுரிக்கப்படாத ஆய்வாகும்.

மங்களதர்சினி.ச. (2022). மலையகத்தில் மாற்று ஊடகமாக இணைய வானொலிகள் - இவ் ஆய்வுக் கட்டுரையானது சிறப்பு கலைமானித் தேர்வின் ஒரு பகுதியை நிறைவு செய்யும் பொருட்டு யாழ்ப்பாண பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறைக்கு சமர்ப்பிக்கப்பட்ட பிரசுரிக்கப்படாத ஆய்வாகும்.

அப்துல் ஹமீத்.பி.எச். (2022). ‘வானலைகளில் ஒரு வழிப்போக்கன்’, ரத்னா ஆப்செட், சென்னை,ப.69.

ஜெனிதா.தி. (2018). மலையகம் சார்ந்த தமிழ் இணையத்தளங்கள் மற்றும் முகநூல் குழுமங்கள் :மாற்று ஊடக தளத்தின் ஊடாக ஒரு பார்வை, இவ் ஆய்வு கட்டுரையானது சிறப்பு கலைமானித் தேர்வின் ஒரு பகுதியை நிறைவு செய்யும் பொருட்டு யாழ்ப்பாண பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறைக்கு சமர்ப்பிக்கப்பட்ட பிரசுரிக்கப்படாத ஆய்வாகும்.

ரஸ்மீன்.எம்.சீ. (2011). ‘சமூக வானொலி மனித வலுவாக்கத்திற்கான ஊடகம்’, சேமமடு பதிப்பகம், கொழும்பு, பக்.2-45.

ரகுராம்.எஸ். (2015). ‘அபிவிருத்தித் தொடர்பாடல் மாற்று நோக்கி’, சேமமடு பதிப்பகம், கொழும்பு, பக்.28-78.

Bhopal (2018). The community radio movement in india challenges and opportunities, Madhya Pradesh, india. Journal publications, www.tiprc.org

Brent.S (2010). Community radio on waiheke island: A case study. School of journalism and communication, https://www.academia.edu/10571078/

Cesar Andrade- Martinez, Luis Alvarez-Rodas, Angle Hernando Gomez. Community radio in Ecuador :cayambe radio message case. https http://www.ijifr.com/searchjournal.aspx 3233569

Free churches of the air the history of community radio in Sweden.(2012). historical journal of film radio and television, https://www.tandfonline.com/loi./chjf20

Jackson.M.P.Harms.R.(2003). Radio websites as a promotional tool, journal of radio studies,https://doi.org/10.1207/s15506843jrs100211 .

Liz,H.C.(2009). Kothmale community radio interirg project; true community radio or feel good propaganda/, International review of research in open and distancelearning. https;//files.eric.ed.gov/fulltext/EJ831709.pdf.

Rachana,.S. (2013) A historic perspective of community radio in india, http://www.ijifr.com/searchjournal.aspx 23471697 volume-1 Issue-4. ID:IJIFR/V1E4/039

Ramesh.s.,juan.R.M. (2018). Community radio in boliva. the information society an international journal http://www.tandfonline.com/loi/utis20 .

Salim.O (2008). Is community radio promoting social change in Malawi?, https://www.reserchgate.net/publication/228777634/

Scifo.S. (2011). The origins and development of community radio in britain: school of media art and design http://www.westminster.ac.uk/research/westminsterresearch.